தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

Office of the Curator
21 APR
Madras-600 005
Govt. Oriental Manuscripts Library
T.4905

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 67 மலர் 2

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2023

துணர் : 67 பிரமோதூத — வைகாசி மலர் : 2

மே — ஜுன் 1992

உள்ளுறை

பக்கம்

1. உவமை நலம் ... 50
இளங்காடு க. சிவசாமி

2. பூமணியின் இரண்டு நாவல்கள் ... 54
டாக்டர் இரா. சண்முகவேலன்

3. பொருண்மொழிக்காஞ்சி ... 60
கு. வெ. பாலசுப்பிரமணியன்

4. ஒப்பில் வழியாற் பொருள் செய்குந ... 64
செ. வை. சண்முகம்

5. தமிழ் நாள், கிழமை, திங்கள் இதழ்களில் எழுதுவோரின் சிந்தனைக்கு ... 73
முனைவர் ச. முத்துக்குமரன்.
(சென்ற இதழ் தொடர்ச்சி)

6. பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை தமிழ்த் துரோகியா ? ... 91
பு. ஜார்ஜ்

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ்.டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
முன்னாள் செயலாளர், தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறை, சென்னை.

,, சிலம்பொலி சு, செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,பி.எல்.,பிஎச்.டி
முன்னாள்இயக்குநர்,உலகத்தமிழாராய்ச்சிநிறுவனம்,சென்னை.

,, முனைவர்சி.பாலசுப்பிரமணியன்,எம்.ஏ.,எம்.லிட்,பிஎச்.டி.,
துணை வேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி எச். டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.
'ஏரகம்' 4/384 சதாசிவநகர், வண்டியூர்வழி, மதுரை-625020

,, முனைவர் மு. கோவிந்தராசன்
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட், பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம், எம். ஏ., பி எச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர். கோ.முத்துப்பிள்ளை, பி.ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர், சென்னை.

,, முனைவர் ஈரோடு தமிழன்பன், எம். ஏ., பி எச்.டி.,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி,சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர்,கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை.

,, புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம். ஃபில்.,
துணைமுதல்வர்.த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., பி. எட்.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவர மேனிலைப்பள்ளி

,, முனைவர் பா. மதிவாணன், எம்.ஏ., எம். ஃபில்., பிஎச்.டி.,
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

உவமை நலம்

இளங்காடு க. சிவசாமி,
1640, மங்கள விலாசம்,
தெற்கு வீதி, தஞ்சாவூர்.

தமிழ்மொழி ஏனைய உலகமொழிகளினும் காலத்தால் தொன்மையதென்பதும், இலக்கண, இலக்கிய வளத்தால் மேம்பாடுடையதென்பதும், இன்னோசை உடையதாய்ச் சொல்வளம் மிக்கதாய்க் கற்றற்கெளியதாய் அமைந்துளதென்பதும் மொழி ஆய்வாளர்தம் முடிந்த முடிபாகும்

தமிழ் இலக்கியங்கள் கருத்தாலும், உவமை நலத்தாலும் நிறைந்து, கற்போர் உள்ளத்தைக் கவரும் சிறப்புடையன. அவ்விலக்கியங்களைக் கற்கப் புகுவார் விடுதல் அறியா வேட்கையராவர் என்று சொல்வது மிகைக் கூற்றன்று. பன்னாட்டறிஞர் பலர் தமிழ் மாணவரான வரலாறு இதற்குச் சான்றுபகரும்.

கல்வியிற் சிறந்த புலவோர் செய்யுள் இயற்றுங்கால் தாம் சொல்லக் கருதிய பொருளைக் கற்போர் எளிதில் உணர்ந்து இன்புற, அவர் (கற்போர்) நன்கு அறிந்த ஒன்றை ஒப்புப் பொருளாகக் காட்டிச் செய்யுள் யாப்பர். அவ் ஒப்புப் பொருளே உவமை எனப்படும்.

உவமை இலக்கியத்தின் சுவையை மிகுவித்துக் கற்போரை மேலும் மேலும் கற்கத்தூண்டும். நெய்யில்லா உண்டிபாழென்பது போல் உவமையில்லாச் செய்யுளும் சிறப்பிலதாம்.

பொருள் விளக்கத்திற்காக எழுதப்பெற்ற உவமைகளுள் சில, உரையாசிரியர் பலரை மயக்கங் கொள்ளச் செய்திருத்தலை அவர்கள் எழுதிய உரைகளில் காணமுடிகிறது. அவற்றுள் ஔவையார் எழுதிய மூதுரைப் பாடல் ஒன்றனுக்கு இரு பெருந்தமிழறிஞர்கள் எழுதிய உரைகளை ஆய்விற் கொள்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

"உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்" என்னும் தொல்காப்பிய நூற்பாவினை நினைவிற் கொண்டே அவர்தம் உரைகளின் வலிமை மென்மைகளைச் சீர்தூக்கி உண்மை காண்போம்

முதுரைப் பாடல் :

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா — கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும். [12]

இப் பாடலுக்கு நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் உரை : ''தாழம்பூ இதழ்களால் பெரிதாயிருக்கின்றது. மகிழம்பூ இதழ்களினாலே சிறிதாயினும் மணத்தினாலே தாழம்பூவினும் இனிதாயிருக்கின்றது கடல் பெரிதாய் இருக்கிறது. ஆயினும், அதிலுள்ள நீர் உடம்பழுக்கைக் கழுவுதற்குத் தக்க நீருமாகாது. அதன் பக்கத்தே சிறிய மணற்குழியிற் சுரக்கும் ஊற்றுநீர் குடிக்கத் தக்க நீருமாகும். ஆதலினால், ஒருவரை உருவத்தினால் சிறியவ ரென்று மதியாமல் இருக்க வேண்டா.'' இவ் உரையைத் தழுவியே பேராசிரியர் மு. சு. அருள்சாமி அவர்களும் உரையெழுதியிருக்கிறார்கள். இன்றளவும் இவர்களின் உரைக் கருத்தே பள்ளி மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வருவதைப் புலவருலகம் நன்கு அறியும்.

மேற்குறித்த மூதுரைப் பாடலில் பாடலாசிரியர் தாம் சொல்லக் கருதிய பொருளை விளக்க இரண்டு உவமைகளைக் கையாண்டிருக்கிறார். உவமைகளுள் ஒன்று கடல் நீரையும், சிற்றூறல் நீரையும் ஒப்பீடு செய்து வேற்றுமையை விளக்குகிறது. கடல் உருவத்தால் தெரிதெனினும் அதன் நீர் இன்சுவை அற்றதாய், உவர்ப்புச்சுவை உடையதாய் இருக்கிறது. சிற்றூறல் உருவத்தால் மிகச் சிறிபெனினும், அதன் நீர் மிகச் சுவை உடைத்தாய் உள்ளது. இவ்வுவமை பாடலாசிரியர் சொல்லக்கருதிய பொருளொடு நன்கு பொருந்தி வருவதனை நம்மால் உணரமுடிகிறது.

அடுத்துச் சொல்லப்படும் உவமை; தாழம்பூ, மகிழம்பூ பற்றிய செய்தியை விளக்குகிறது. தாழம்பூ மடலால் பெரியது, எனினும், இதழால் சிறிய மகிழம்பூ மணத்தால் தாழம்பூவினும் இனியது என உரை எழுதியுள்ளார்கள். இவ்வுரைக் கருத்து ஏற்றற்கு உரியதன்று. தாழம்பூவின் மணம் மிக இனியதாகும். தாழம்பூதான் எட்ட இருந்தே சிறிது தொலைவில் உள்ளாரையும் தன் இனிய மணத்தால் இன்புறச் செய்வது, இலக்கியச் சான்று காட்டி இதனை நிறுவ விரும்புகிறேன்.

நற்றிணை 203 ஆம் பாடல் [வரிகள் 2-6]
தடந்தாள் தாழை முள்ளுடை நெடுங்கோட்டு
...... மணங்கமழ் கானல் ''

உரை : ''பெரிய தாளை உடையதான தாழையினது முள்ளுடைய நெடிய கிளையினிடத்தேயுள்ள அகமடற்கண்ணே, முகையானது, தான் முதிர்தலாலே கட்டவிழ்ந்தது. அதுதான் சங்கு நீண்டாற்போன்ற தோடுகளாலே மூடப்பெற்ற பெண் பூவாகவுமானது. மோதுகின்ற அலையினது தாக்குதலாலே அப்பூ சிதைவுற்றுத் தாது உதிர்ந்தும்போயிற்று. அதனின்றும் எழும் நறிய மணத்தாலே அதுதான் சிறிய குடியிருப்பையுடைய பக்கத்துத் தெருக்களிலுள்ள புலால் நாற்றத்தைப் போக்கும். அத்தகைய தாழை மணம் கமழுகின்ற கானற் சோலை.'' (புலியூர்க் கேசின் உரை)

சிலப்பதிகாரம், கடலாடு காதையில் வரும் 'கடற்புலவு கடிந்த மடற்பூந் தாழை' என்ற தொடருக்குக் ''கடலினது புலால் நாற்றத்தைக் கெடுத்த மடலவிழும் பூவையுடைய தாழையால்'' என்றும், அகநானூறு பாடல் 130 ல் வருகின்ற, 'புலவுப்பொரு தழித்த பூநாறு பரப்பின்' என்ற தொடருக்குப் ''புலால் நாற்றத்தைத் தாக்கி ஒழித்த மலர் (தாழம்பூ) நாற்றம் கமழும் இடத்தின்கண்'' என்றும் நாவலர் ந. மு. வே. நாட்டார் அவர்களே உரை எழுதியுள்ளமை நன்கு நினைவிற் கொள்ளத் தக்கதாம்.

மேற்காட்டிய மூதுரைப் பாடலில் வந்துள்ள தாழை என்ற சொல்லுக்குத் தாழம்பூ எனப் பொருள் எழுதியது பொருந்தாக் கூற்றேயாம். இனிய மணமுள்ள இரண்டு பூக்களை (தாழம்பூ, மகிழம்பூ உவமைக்குக் காட்டாக எடுத்துக்கொண்டு, உரை எழுதியிருப்பது பொருளோடு பொருந்தி வாராத தன்மையை எளிதில் புலப்படுத்தும். தாழம்பூவின் மணம் ஒருவகையானது, மகிழம்பூவின் மணம் பிறிதொரு வகையானது. ஆனால், மணத்தால் ஒன்றற்கொன்று தாழ்ந்ததில்லை. இரண்டுமே சிறந்த மணமுடையன.

உரையெழுதிய இருபெருமக்களும் தாழை என்ற சொல்லுக்குத் தென்னம்பூ எனப்பொருள் கொள்ளாது தாழம்பூ என்று கொண்டுவிட்டதால் உவமை பொருளோடு பொருந்தவில்லை.

சங்க இலக்கியங்களில் தென்னையைக் குறிக்கத் 'தெங்கு' என்ற சொல்லும் 'தாழை' என்ற சொல்லும் ஆட்சிபெற்றிருப்

பதனைப் பரக்கக் காணலாம். மணிமேகலைக் காப்பியம் மலர்வனம்புக்க காதையில், "கொழுமடல் தெங்கின் விளைபூந் தேறலின்' எனவருகிறது. 'கொழுமையான மடல்களைக் கொண்ட தென்னையின் பாளையிலே விளைகின்ற தேறலிலே," என உரையெழுதப்பட்டிருக்கிறது. இனித் தென்னையைக் குறிக்கத் 'தாழை' என்ற சொல் இலக்கியங்களில் பயின்று வருவதனைச் சில எடுத்துக்காட்டுகளால் காண்போம்.

I) புறநானூறு: "ஓங்குமணற் குவவுத் தாழைத் தீநீரோடு" (பா-24) உரை: "உயர்ந்த மணலிடத்துத் திரண்ட தெங்கினது இனிய இளநீருடனே."

II) திருமுருகாற்றுப்படை: "தாழை இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி" உரை: தெங்கினது இளநீரையுடைய சீரிய குலை உதிர மோதி." (பாடல்வரி, 307, 308)

III) திருஞான சம்பந்தர்: (3 ஆம் திருமுறை திருவை காவூர்ப் பதிகம்) "கோழைமிட றாககவி கோளுமில வாகஇசை கூடுவகையால் ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொல்மகிழும் ஈசனிடமாம் தாழையின நீர் முதிய காய்கமுகின் வீழநிரை தாறுசிதறி வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல் சேறுசெயும் வைகாவிலே."

IV) (2 ஆம் திருமுறை திருப்பழுவூர்ப் பதிகம்)
"...... மட்டைமலி தாழையின் நீர் திசை" (பா-10)

மேற்காட்டியவற்றால் தென்னையைக் குறிக்கத் தாழை என்ற சொல் சங்க காலந் தொடங்கி வழங்கி வந்துள்ளமையை நன்கறியலாம். காலத்தால் பிந்திய 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஔவையார் தாம் பாடிய மூதுரையில் தென்னையைக் குறிக்கத் தாழை என்ற சொல்லை ஆட்சி செய்திருத்தலை அறியமுடிகிறது.

தென்னையின் மடல் வடிவால் பெரியது. ஆனால், தென்னம்பூ மணமற்றது. மகிழம்பூ விதழ் வடிவால் சிறியது. ஆனால் மணத்தால் உயர்ந்தது. "உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்" என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கேற்ப உவமை பொருளோடு ஒத்திருத்தலைக் காண்கிறோம். எனவே, இம் மூதுரைப் பாடலில் வரும் 'தாழை' என்ற சொல்லிற்குத் தென்னம்பூ எனக் கொள்வதே நேரியதெனக்காட்டி இக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

பூமணியின் இரண்டு நாவல்கள்

டாக்டர் இரா. சண்முகவேலன்,
தமிழ்த்துறை,
அ. வீ. வா. நி. திரு புட்பம் கல்லூரி,
பூண்டி - 613 503.

1) வெக்கை (1982)

பூமணியின் இரண்டாவது நாவல் இது. இதுவும் முன்னதைப் போல — பிறகு (1979) போல — வர்க்கப் போராட்டத்தை விவரிக்கிற — மார்க்சியக் கண்ணோட்டமுடைய ஓர் இலக்கியம்.

> மனிதனின், தொடர்ந்த இடைவிடாத வளர்ச்சிக்குத் தடையாக உள்ள சுரண்டும் வர்க்கத்தை ஒழிப்பதற்காக நடைபெறும் மாபெரும் வர்க்கப் போராட்டத்திற்கு இலக்கியம் உதவியாக இருக்க வேண்டும். இந்த வர்க்கப் போராட்டத்தினால்தான் மனிதத் தன்மை வளரும் — மேம்படும் — சமுதாயம் முன்னோக்கிச் செல்லும். இதற்கு உறுதுணை புரிவதுதான் இலக்கியம். இத்தகைய இலக்கியம் — வர்க்கக் கண்ணோட்டம், வரலாற்றுக் கண்ணோட்டம் விஞ்ஞானக் கண்ணோட்டம், புரட்சிகரமான மனிதாபிமானக் கண்ணோட்டம் ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்த மார்க்சியக் கண்ணோட்டம் உடையது.
>
> (—மார்க்சியமும் தமிழ் இலக்கியமும், ப. 307)

என்பார் ஞானி. மார்க்சியம் இயக்கவியல் பொருள் முதல் வாதம் (Dialectical Materialism.), வரலாற்று இயல் பொருள் முதல் வாதம் (Historical Materialism) ஆகிய இரண்டு தத்துவங்களைக் கொண்டதாகும். இவ்விரண்டனுள் முதலாவதாகிய இயக்கவியல் பொருள் முதல் வாதம் மூன்று விதிகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் முதலாவது முரண்பாடுகளின் ஒற்றுமை (Unity of Opposites) என்பதாகும்.

> முரண்டு பிடிப்பது முரண்பாடு. முரண்பாடாவது ஒத்துவர மறுப்பது. இதை எதிர்மறைகளின் ஒருமையும், போராட்டமும் என்பர். பிரபஞ்சம் முழுவதும் முரண்பாடுகளால் ஆனது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட செயல்களும், நிகழ்ச்சிகளும் மோதிக் கூர்மையடைய ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒன்று வெற்றி

> பெறுகிறதென்றால் அப்பொருள் மாறவும், வளரவும் செய்யும் ... இந்த எதிர்மறைகளின் ஒற்றுமை தற்காலிக மானது. மோதுதலே-போராட்டமே நிலையானது.
> (இருபதாம் நூற்றாண்டுத் தமிழக்கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம், ப. 35)

என்று விளக்குகிறார் டாக்டர் கோ. தான்யா.

வெக்கையின் பாடுபொருள் வர்க்க முரண்பாடு. அதாவது, நிலவுடைமையாளருக்கும் ஏழை விவசாயிக்கும் இடையே உள்ள முரண்பாட்டையும் அந்த முரண்பாட்டினால் எழுந்த மோதல்களையும் காரண காரியத்தோடு விவரிக்கிறது. நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தில் வாழ்கிற ஏழைக் குடியானவனின் - விவசாயியின் பதினைந்து வயதுகூட நிரம்பாத ஒரு சிறுவனுடைய கதையே வெக்கை. அவனின் கதை ஒரு சிறுகதைக்குரிய ஆழத்தையும் பரப்பையும் கொண்டது. அதனை நீட்டி வளர்த்து நாவல் வடிவம் தரப்பட்டுள்ளது.

வடக்கூரான் என்கிற நிலவுடைமையாளர் ஊரில் உள்ள ஏழை விவசாயிகளின் நிலங்களைச் சிறுகச் சிறுகச் சுரண்டி ஊரிலேயே பெரிய நிலவுடைமையாளராகிறார். சுரண்டப்பட்டவர்கள் அவருக்கு அடிமையாகிறார்கள். அவருடைய நிலங்களுக்கு இடையில் ஒரு சிறு பகுதியாக-துண்டு நிலமாகச் சிதம்பரம் என்கிற சிறுவனின் அய்யா நிலம் இருக்கிறது. அதனையும் தனதுடைமையாக்கிக் கொள்ள வடக்கூரான் அய்யாவிடம் நேரிடையாகவும், சுற்றுவழியிலுமாகவும் நியாயத்தைக் கூறிக் கேட்டுப் பார்க்கிறான். அய்யாவிற்கு வடகூரானின் அரிப்பி லிருந்து விடுபட விரும்பினாலும் சூழல் விலங்கிட்டுவிடுகிறது. அதாவது, அந்த நிலம் அவருடைய மனைவியினது சீதனப் பொருளாகையால், அய்யா, மைத்துனரிடம் செய்தியைச் சொல்ல, அவர் மறுக்க, நிலம் வடக்கூரானுக்குச் சொந்தமாகவில்லை. இந்தக் கூப்புணர்ச்சி உட்பகையை மூட்ட வடக்கூரானின் உள்ளுக்குள் கங்காய்க்கனன்று கொண்டிருக்கிறது. சிதம்பரத்தின் அண்ணன் ஆடுகளை அவனது புஞ்சையில் மேயவிட்டிருக்கையில் வடக்கூரான் அவனை அடித்துக் கொன்று புதருக்குள் போட்டுவிடுகிறான். சிதம்பரத்தின் வீட்டிலும், மாமாவின் வீட்டிலும் வலை போட்டுத் தேடுகிறார்கள். கடைசியில் புதருக்குள் எவனோ செத்துக் கிடக்கும் செய்தி கேட்டுப் போய்ப் பார்க்க அவனாக இருக்கிறது அவன கொலை செய்யப்பட் டிருக்கிறான் என்பதை புரிந்து அந்தக் கொலையாளி யாரென்று கண்டுபிடித்து அவனைக் கொலை செய்ய வேண்டுமென்று

அய்யாவும், சிதம்பரமும் மனவேகம் கொள்கிறார்கள். பல நாட்கள் கழிந்த பிறகு கொலையாளி வடக்கூரான் என்று தெரிந்து அவனை கொல்ல அய்யாவும், அவனது அடித்துக் கொன்ற கையை கொலை செய்த வலது கரத்தை — வெட்ட மகனும் (சிதம்பரமும்) காலம் பார்த்துக் குறியாய் இருக்கிறார்கள். ஒரு நாள் இரவு வடக்கூரான் கடைக்கு வந்திருந்த சமயத்தில் சிதம்பரம் எவரும் எதிர்பாராதிருக்கையில் தனது அரிவாளால் அவன் கையைக் குறி பார்த்து வெட்ட, அது தவறி உடலில்பாய, அந்த இடத்திலேயே மண்டையைப் போடுகிறான். சிதம்பரம் தப்பித்து ஓடும் பொருட்டு அவனுடைய அய்யா தெரு மின் விளக்குத் தொடர்பைத் துண்டித்துவிடுகிறார். தனித்தனியாக ஓடியவர்கள் பின்பு ஒன்று சேர்ந்து மலைக் காட்டிற்குப் போகிறார்கள். அங்கிருந்து ஒவ்வொரு ஊராகச் சென்று தோட்டங்களிலும், காடுகளிலும், மலைகளிலும் ஒளிந்திருக்கிறார்கள். அவ்வப் போது சிதம்பரத்தின் மாமா அவர்களைச் சந்தித்து ஊரின் நிலமையைச் சொல்லிப் போகிறார். சிதம்பரம் அய்யாவின் சொல்படிச் சித்தி வீட்டிற்குச் செல்கிறான். அங்கிருக்கிற அம்மாவையும் தங்கையையும் பார்த்துவிட்டு மறுபடியும் அய்யா சொல்லியிருந்த இடத்திற்கு வருகிறான். அய்யா, தானும் அவனும் நீதிமன்றத்தில் சரணடைய வேண்டியதைப் பற்றிச் சொல்ல, அவன் வாதாடுகிறான். இறுதியில், மாமாவின் கருத்தின் படியும் ஊர்ச்சூழலின் படியும் அவ்வாறு செய்ய இசைகிறான். தந்தையும் மகனும் தலைமறைவாய் இருந்த இடத்திலிருந்து புறப்பட்டுப் பட்டணத்திற்குப் போகிறார்கள்.

இந்தக் கதையில் சிதம்பரம் வடக்கூரானைக் கொலை செய்த நாள் திங்கட்கிழமை இரவு. அந்நாள் இரவே மலைக் காட்டிற்குள் ஓடி ஒளிகிறார்கள். அந்நாள் இரவிலிருந்து வெள்ளிக்கிழமை வரையில் ஒவ்வோர் இடமாகப் பெயர்ந்து யார் கண்ணிலும் படாமல் இருக்கிறார்கள். சனிக்கிழமை அன்று அய்யா, ஊரின் நிலமை அறிய மாமாவைச் சந்திப்பதற்காக ஊருக்குப் போகிறார். சிதம்பரம் சித்தியின் வீட்டிற்குப் போகிறான். இதற்கு இடைப்பட்ட நாட்களில்-திங்கள் இரவு முதல் வெள்ளி வரையில் தந்தையும் மகனும் ஒளிந்திருக்கும் பொழுது பேசிக் கொள்கிறார்கள். அவர்களின் அந்தப் பேச்சுக் களை நீக்கிவிட்டால் நாவலின் நீளம் குறுகிவிடும்; சிறுகதை யாகிவிடும். தலைமறைவாகித் தந்தையும் மகனும் உரையாடும் பகுதியே மற்ற பகுதிகளைக் காட்டிலும் மிகுதி. அந்தப் பகுதியே நாவலின் பின்னணியைத் தூலமாகத் தூக்கிக் காட்டு

கிறது; பூமணியின் நிலவியல் அறிவுக் கூர்மையைக் கண்டறிய உதவுகிறது. சமுதாயப் பார்வை உடைய படைப்பு எதுவானாலும் மனிதனை அவன் வாழிடங்களோடு-சுற்றுப் புறச் சூழலோடு காட்டுதல் மரபு. அந்த மரபிற்கு அதிகச் சிறப்பளிக்கிறது வெக்கை. மனிதனை மண்ணுடன் / மக்களுடன் உறவுபடுத்திக் காட்டாத இலக்கியம் சமுதாய இலக்கியம் என்று கூறக் கூடுமா? வெக்கை ஒரு சமுதாய நாவல் இலக்கியம் அதன் சுவடு அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் உள்ளது. சிதம்பரம் கரும்புத் தோட்டத்தில் மறைந்திருக்கிறான். அந்தத் தோட்டத்துச் சூழல் பின் வருமாறு சொல்லப்படுகிறது:

> சரசரப்பு பக்கத்தில் கேட்டது. பின்னால் திரும்பிப் பார்த்தான். பெரிய பன்றி சேற்றுக்குள் மண்டியிட்டவாறு கரும்பை சப்புச் சப்பென்று மென்று கொண்டிருந்தது. ரொம்பப் பெரியது. மண்ணைக் கறி கீழ் வாக்கில் தொங்கியது. நீளநீளமாய் கோரைப் பற்கள். கரும்புக் கணுக்களைத் துப்பும்போது அசிங்கமாய்ச் சிரித்த மாதிரி இருந்தது. உள்ளுக் குள்ளேயே உறுமியது. (ப. 104)

சமுதாய இலக்கியத்தினுடைய இன்னொரு பண்பு சமுதாய விமரிசனம் ஆகும். சமுதாய விமரிசனம் இருவகையில் வெளிப் படும். படர்க்கைக் கூற்றினாலேயோ, தற்கூற்றினாலேயோ சமுதாயம் விமரிசிக்கப்படுகின்றது. வெக்கையில் தற்கூற் றினாலேயோ சமுதாய விமரிசனம் செய்யப்படுகிறது. வேறு மொழியில் கூறினால், சமுதாயம், அந்தச் சமுதாயத்து மக்களி னாலேயே ஆராயப்படுகிறது. நீதி மன்றத்தில் நீதி வழங்கப் படுகிற விதம் குறித்து அய்யாவும் சிதம்பரமும் உரையாடுகையில்,

> பொய்க் குதிரைக்குள்ள ஆட்டக்காரன் இருந்த மாதிரி கோர்ட்டாரு உக்காந்துக்கிட்டு வாரவன வெசாரிச்சா எப்படி. சங்கதி நடந்த எடத்துக்குப் போயி நாலு சனங்கள நேர்ல வெசாரிக்கணும். அப்பத் தான் நாயம் எதுன்னு தெரியும். இதென்னடான்னா கோழி முட்டைக்கு ரோமம் புடுங்குனது போல மெனக்கிட்டு வெசாரிச்சு வாய்தா மேல வாய்தா போட்டு இழுத்தடிப்பான், ஒவ்வொரு வாய்தாவுக்கும் கோர்ட்ல நிக்கிற சேவகன் இன்னாரு வா அன்னாரு வான்னு கத்திக் கூப்புடுறதுக்குக் கைய நீட்டுவான்.

மொதத் தட்சண வச்சுட்டுத்தான் உள்ளே போகணும் அங்க • நாயங்கெடைக்கும்னு நெனச்சுக்கிட்டு. எல்லாப் பெயலும் சேர்ந்து கேலிக்கூத்து நடத்துறானா சும்மாவா. வேல மெனக்கிட்ட பெயக. என்னைக் கேட்டா கோர்ட்டு மயிரு மட்டை ஒண்ணும் இருக்கக் கூடாது. ஒருத்தன் அணியாயம் பண்ணுறான்னா மத்த சனங்க சேந்து சுடச்சுட அந்த எடத்துலேயே தண்டன குடுக்கணும்.

என்று அய்யா தனது அனுபவத்தின் அடிப்படையில் கருத்துரைக் கிறார்.

நிலப்பிரபுத்துவச் சுரண்டலாயினும் சரி, முதலாளித்துவச் சுரண்டலாயினும் சரி, பொதுவாகத் தனியுடைமைச் சுரண்டலை அய்யா, சிதம்பரம் போன்ற தனிமனிதர்களினால் ஒழிக்கவோ தீர்க்கவோ இயலாது ஒன்று பட்ட மக்களின் திரட்சியினாலும் புரட்சியினாலுமே அதனை ஒழிக்கவும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தவும் முடியும். இந்தச் சிந்தனையை மார்க்சியம் அளவு மாறுபாடும் குணமாறுபாடும் (Quantitative changes bring Qualitative changes.) என்னும் விதியின் வாயிலாக எடுத்துரைக் கிறது. அதாவது, ஒரு செயலின், நிகழ்ச்சியின், ஒரு பொருளின் அளவு அதிகரிக்கும்போது அந்தச் செயலின், நிகழ்ச்சியின், ஒரு பொருளின் குணம் மாறுகிறது என்பதாகும். வெக்கையின் இறுதி யில் சிதம்பரத்தையும், அய்யாவையும் ஆதரிக்க மாமாவின் வீட்டார்களும், சித்தியின் வீட்டார்களும் ஒன்றுபட்டுத் திரள்வது பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. சிதம்பரத்தையும், அய்யாவையும் காப்பாற்ற அவர்கள் முனைகிறார்கள். அவர்கள் வடக்கூரானின் கொலை, பரமசிவம் (அய்யா)-வடக்கூரான் ஆகிய இருவர்க்கும் இடையிலான தனிப்பட்ட பிரச்சனை என்று கருதாமல் பொதுப்பிரச்சனை என்று கருதத் தொடங்குகிறார்கள்; சுரண்டும் வர்க்கத்திற்கும் சுரண்டப்படும் வர்க்கத்திற்கும் இடையிலே நடைபெறும் இடையறாப் போராட்டத்தின் ஒரு நிகழ்ச்சியாக மதிப்பிட முனைகிறார்கள். அதனாலேயே சிதம்பரம் நக்சலைட்டாக மாறும் போக்கினின்று தடுக்கப்படுகிறான்; நீதிமன்றத்தில் சரணடைய ஒப்புக்கொள்கிறான்; சுருங்கக்கூறின் தனிமனிதனின் நேரடி மோதலைத் தவிர்த்துச் சமுதாயப்புரட்சிக் கான மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியைத் தூண்டுகிறது வெக்கை.

சுரண்டப்பட்ட வர்க்கத்தின் எழுச்சிக்குக் காரணமாய் இருக்கிற சுரண்டும் வர்க்கத்தினது பல அம்சங்களையும் நாவல்

காட்டுகிறது. முதலாளித்துவச் சமூகத்தினனாக விளங்குகிற வடக்கூரானின் மைத்துனன் ஒரு ஜின்னிங் தொழிற்சாலையின் முதலாளி. அவன் ஆர்ப்பாட்டம் நடத்திய தொழிலாளர்கள் கூட்டத்தின் மீது சுடுகிறான், ஒருவன் இறக்கிறான். இறந்தவனை ஊர்வலமாகத் தெருத் தெருவாகக் கொண்டு செல்ல அவனே முன்னிற்கிறான். அய்யாவிற்குத் தொழிற்சாலையில் வேலை கொடுக்கிறான். அவர் மறுக்க அவன் அச்சுறுத்துகிறான். அதனால் அவர் வேலையைவிட்டு வெளியேறுகிறார். அவர் தனது சொந்த ஊரிலிருந்து குடிபெயர்ந்து வேற்றூருக்குக் குடியேறியதற்கும்கூட நிலப்பிரபுத்துவத்தின் சுரண்டலே, ஆதிக்கமே காரணமாகிறது.

இப்படி வர்க்கப் பிளவைக் காட்டுகிற வெக்கை, தனிமனிதர்களின் உள்ளுணர்வுகளையும் உள்முகங்களையும் காட்டத் தவறவில்லை. அய்யா — மாமன் உறவு, அய்யா — ஆத்தா உறவு, அய்யா — பிள்ளைகள் உறவு, மாமன் — தங்கைகள் உறவு, மாமன்—அத்தை உறவு சித்தி—சின்னையா உறவு, சித்தி ஆத்தா உறவு, அண்ணன்—தம்பி உறவு என உறவு நிலைகளில் இழைந்தோடும் பாசக் கயிறுகளினால் கட்டுப்பட்ட பாட்டாளி நெஞ்சங்களின் கொந்தளிப்புகள் ஆங்காங்கே தெறிக்கின்றன. ஒருவரின் பொருட்டு ஒருவரின் வாழ்க்கை இருப்பு இயங்குதலைக் காட்டும் நிகழ்ச்சிகள் பல காணக்கிடக்கின்றன.

அண்ணனைக் கொன்றதற்காக வடக்கூரானைக் கொலை செய்கிறான் தம்பி. மகனைக் கொலை செய்ததற்காக வடக்கூரானைக் கொல்லக் காலம் பார்த்து வளைய வருகிறார் தந்தை. இப்படிப் பார்க்கும் பொழுது, தனிமனிதனுக்கு ஏற்படுகிற-பாதிப்பு-இழப்பு அவனுள் பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டி வெக்கையாக உருவ மாற்றம் அடைந்து பொல்லாத விளைவுகளை ஏற்படுத்தித் தணிகிறது; சமூகக் கொடுமைகளை உண்டுபண்ணி ஒடுங்குகிறது. இத்தகைய சமூகக் கொடுமைகளுக்குத் தனிப்பட்ட பகையோ, தனிமனித வெறுப்போ காரணமாகாது. காரணமாய்த் தெரிவதற்குள்ளே அடிப்படைக் காரணியாய் இருப்பது வர்க்க முரண்பாடே.

வர்க்க முரண்பாட்டை விவரிப்பதோடு நின்றுவிடாமல் அதற்கு மேலேயும்போய் வர்க்க முரண்பாட்டினை ஒழித்துக் கட்டவே மக்களைத் தூண்டுகிறது / திரட்டுகிறது வெக்கை.

(தொடரும்)

பொருண்மொழிக்காஞ்சி

கு. வெ. பாலசுப்பிரமணியன்
இணைப்பேராசிரியர்
இலக்கியத்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

புறநானூற்றில் பதினாறு பாடல்கள் பொருண்மொழிக் காஞ்சித்துறைக்குரியன. செவியறிவுறூஉத் துறைக்குரிய ஐந்தாம் புறப்பாட்டு பொருண்மொழிக் காஞ்சித்துறைக்கும் உரியதாக எண்ணப்பட்டிருக்கின்றது. புறப்பொருள் வெண்பாமாலையின் இலக்கண நெறிப்படிப் பொருண்மொழிக்காஞ்சி பொதுவியல் திணைக்குரியது.

> எரிந்திலங்கு சடைமுடி முனிவர்
> புரிந்துகண்ட பொருள்மொழிந் தன்று

என்பது புறப்பொருள் வெண்பாமாலை இத்துறைக்குக் கூறும் இலக்கணம். இவ்விலக்கணத்திற்கும், இதற்குரியவாகச் சுட்டப் பெறும் புறப்பாடல்களுக்கும் உள்ள இயைபு எண்ணற்குரியது.

உலக நிலையாமையைச் சுட்டிப் புகழ் நிலைபேற்றிற் குரியன புரியுமாறு அறிவுறுத்தலைப் பொருளாக உடையது பொருள்மொழிக் காஞ்சி.

> ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த
> வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த
> இரவன் மாக்கள் ஈகை நுவல
> ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய
> தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்து
> ஆங்கினி தொழுகுமதி பெரும ஆங்கது
> வல்லுநர் வாழ்ந்தோ ரென்ப தொல்லிசை
> மலர்தலை யுலகத்துத் தோன்றிப்
> பலர்செலச் செல்லாது நின்றுவிளிந் தோரே

(புறம் : 24 : 28 - 36)

என்னும் பாட்டு வாழ்நெறி இன்னது எனச் செவியுறுத்துவது. 'குப்பை நெல்லின் முத்தூறு தந்த கொற்ற நீள்குடைக் கொடித் தேர்ச் செழிய' என்பதால் இப்பாட்டுப் பாடாண் திணைக்குரிமை வெளிப்படை. பாடாண் திணைக்கண் உயர் நெறிப்படுத்தும் பாங்கிற்றாய இப்பனுவலைச் செவியறிவுறூஉ எனக் கூறற் பொருந்துவதாகும். உலகரனைவர்க்கும் பொருந்தும் பொது

நெறிகளை உரைப்பதாலும், பல்திணைப் பொதுமை நெறித்தாய செய்திகளை மொழிவதானும் வெண்பாமாலை இதனைப் பொது வியற்பாற் படுத்திற்று. பலர் விளிந்தோரே என்று கூறியமை கொண்டு இதனிற் காஞ்சித் தன்மையை ஏற்றிக் காணற் பொருந்தாது. நிலைபேறுடைய புகழ்நெறியை அறிவுறுத்தலே புலவர் நோக்கமாகும். ஆகவே, இப்பனுவலைப் பாடாண் செவி யறிவுறூஉ எனக் கருதலே பொருந்துவதாகும்.

சோழன் நலங்கிள்ளி பாடிய 75-ஆம் புறப்பாட்டு முதுகாஞ்சித் துறைக்குரியது. இதனை உறுதிப்பொருள் உரைக்கும் பொருள் மொழிக் காஞ்சியாக மட்டும் எண்ணல் சாலாது அறிவு மடம் படும் வழி நிசழும் அறநெறி இழப்பைச் சுட்டியமையான் இதனை முதுகாஞ்சி எனல் வேண்டும்.

'பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே' என அறிவுறுத்தும் 121-ஆம் பனுவல் தொல்காப்பிய இலக்கணத்திற்கேற்பப் பாடாண் செவியறிவுறூஉ என எண்ணற் பாலது. மலையமான் காரி கபிலர் போலும் செறுத்த செய்யுட் செந்நாப் புலவரை மடவரோடு ஒருங்கெண்ணித் தன் ஈகைப் பெருமிதம் புலப்பட ஒழுகியிருப்பான் போலும்! அச் சூழலிற் பிறந்த பாட்டிஃது எனக் கணித்தால் செவியறிவுத் துறைப்பொருண்மைக்குரியது இச் செய்யுள் என்பது விளங்கும். இதனை நச்சினார்க்கினியர் பாடாணுக்குரிய இருவகை விடையின் பாற்படுதுவர். அதனினும் செவியறிவுறூஉ என்பதே இயைபுடையதாகும்.

கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதியின் 'உண்டாலம்ம' எனத்தொடங்கும் புறச்செய்யுளை இளம்பூரணர் வாகைத்திணைச் சான்றோர் பக்கமெனவும், நச்சினார்க்கினியர் துறை குறியாது பாடாண் பாட்டெனவும், சோமசுந்தர பாரதியார் வாகைத்திணைப் பாற்பட்ட அருளொடு புணர்ந்த அகற்சி எனவும் எண்ணுவர். புகழ்வேட்டு உயிர்நல்கும் உயரிய வாழ்க்கையைச் சான்றோர் பக்கம் எனல் பொருந்துவதாகும்.

ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியனின் 'உற்றுழி உதவியும்' எனத்தொடங்கும் பாட்டு இளம்பூரணர்க்கும் நச்சினார்க்கினியர்க்கும் ஒருதலையாக வாகைத்திணை ஏனோர் பக்கமாகக் காட்சிதரும். மேற்பால், கீழ்ப்பால் என்ற வருணப் பாகுபாடு இப்பனுவலை ஏனோர் பக்கமாகத் தெளியக் காட்டுகின்றது.

தொண்டைமான் இளந்திரையனின், இறையாண்மை இலக்கணம் உரைக்கும் பனுவல் காஞ்சியுள் முதுகாஞ்சி எனத்

தக்கது. காவற்சாகாடு மாணுறச் செலுத்தவோனும் அஃது ஆற்றாதவனும் என இருகூறுபட உரைத்தமையின் இதனை முதுகாஞ்சி என எண்ணல் வேண்டும். மேற்சுட்டிய எழுபத்தைந்தாம் புறப்பாட்டும் இவ்வகைப்பினதே எனக் கருதத்தகும்.

மோசிகீரனாரின் புறப்பாட்டு 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என மொழிவது. இதனைப் பாடாணுக்குரிய விளக்கு நிலையாக எண்ணுவர் சோமசுந்தரபாரதியார். இதனை விளக்குநிலை என்பதினும் செவியறிவுறூஉவாகக் கொள்வதே பொருந்தும். 'மாலை வெண்குடை மன்னர் கண்டாய், நல்லுயிர் ஞாலம் தன்னுள்' என இச்செவியறிவுறூஉக் கருத்தைச் சிந்தாமணி ஆசிரியர் மேலும் தெளிவுபடுத்துவர்.

ஔவையாரின் புறப்பாட்டு நாடு, காடு, அவல், மிசை ஆகிய நானில இயற்கையும் ஆடவர் நல்லவராக நலம்தரும் எனமொழியும். இதனையும் பாரதியார் விளக்குநிலை என்பர். இதனையும் செவியறிவுறூஉவாகக் கொள்ளலே சிறப்புடையதாகும்.

பாண்டியன் அறிவுடைநம்பியின் 'படைப்புப் பல படைத்து' எனத் தொடங்கும் பனுவல் இளம்பூரணர்க்கும் நச்சினார்க்கினியர்க்கும் வாகைக்குரிய பொருளொடு புணர்ந்த பக்கமாக அமையும். மக்கட் பேற்றின் மாண்பு பெற்றமையினை வாகைத் திணைப்பாற் படுத்தலும், பொருளொடு புணர்ந்த பக்கமாக எண்ணலும் சிறப்புடையன.

செல்வத்துப் பயன் ஈதல் என வன்புறை செய்யும் நக்கீரரின் பாட்டும் வாகைத் திணையின் பொருளொடு புணர்ந்த பக்கமாக எண்ணுதற்குரியது ஈதல் இயையாக் கடை சாதலும் இனி தென்பது வள்ளுவம். ஆகவே, உறுதிப்பொருள் உணர்ந்தார் ஈகைப்புகழாகிய வாகை பெறுவர் என்பதே இத்துறையமைந்த பனுவலின் பொருளாகும்.

தொடர்ந்து வரும் 190, 191, 192, 193 ஆகிய பாடல்களும் இதே துறைக்குரியனவாக எண்ணுதல் பொருத்தமுடையதாகும். எலியனைய முயற்சியராகிச் செல்வம் நுகராது இறுகப்பிடிக்கும் மதுகையற்றோர் நட்பு இல்லையாக, பொருந இடமருங்கு வீழ்ந்த கேழலை உண்ணாது புலந்து களிறெறிய நோக்கி நிற்கும் புலியனைய வலியர்பாற் கொண்ட நட்பு உளதாக, உரைக்கும் நல்லுருத்திரன் பாட்டு பொருளொடு புணர்ந்தபக்கம் என்பதிலும்

வேறுதுறைக்குப் பொருந்துவது அன்றாம். நரையின்மைக்கு அக, புற அமைதியும் உள ஒத்திசைவும் வேண்டற்பால என உரைக்கும் பிசிராந்தையின் பாட்டும் அன்னது. கணியன் பூங்குன்றனின் பாட்டு, ஆசீவக நெறியினை உரைக்கும் என்ப. சாதல் புதுவதன்று; வாழ்தல் இனியதுமன்று; அரியஉயிர் வழின்பாற்படும் என உறுதிப்பொருளைப் புணர்ந்த பகுதியாக இப்பனுவல் விளங்குதல் ஒருதலை. ஓரேர் உழவரின் பாட்டு, இல்வாழ்க்கை காலைத்தளைப்பது, இல்லெனினியாணும் நன்னெறிக் கண் செலக்கூடும் என உலகியல் வாழ்க்கை ஒருவனைப் பிணைத்து நிறுத்தும் இயல்பு கூறிற்று. வாழ்க்கைப் பொருள் இன்னது என்று உணர்ந்து வெறுப்புடைத்துறவின்பாற் செலாது காமங் கண்ணிய இல்லற நெறி உயர்ந்ததெனத் துணிந்த தன்மையை இப்பனுவல் கூறலின் இதனையும் வாகை என எண்ணல் அமைவதாகும்.

வடக்கிருந்த கோப்பெருஞ்சோழனின் புறப்பனுவல் யானை வேட்டுவன்போல் உயர்ந்தது உள்ளி அஃதாற்றாத ஏனையர்க்கு, உடலின் நிலையாமையினையும், புகழின் நிலைப்பையும் ஒருங்கு உரைக்குமாறு அமைந்ததாதலின் காஞ்சித்திணைக்குரிய முது காஞ்சி என்ற துறைப்படுத்தல் சிறப்புடையதாகும்.

பெருண்மொழிக் காஞ்சித் துறையாகக் கூறப்பெறும் பதினாறு பனுவல்களுள் ஆறு வாகைத் திணைப்பொருளொடு புணர்ந்த பக்கத்தன; நான்கு பாடாண் செவியறிவுறூஉத்துறையின; மூன்று காஞ்சி சார்ந்த முதுகாஞ்சியின; வாகைத்திணை ஏனோர் பக்கத்திற்கொன்றும், சான்றோர் பக்கத்திற்கொன்றும், உரியன. காஞ்சித்திணையின் மாற்றருங்கூற்றம் சாற்றிய பெருமைக்குரியது ஒன்று வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய மூன்று திணைக்கும் உரியவாக இவை விளங்குதல் எண்ணுதற் குரியது. இவை பதினாறும் அறிவுரைக்கும் பாங்கின எனினும் செவியறிவுறூத்தன்மைய நான்கே. தம் மூத்த அறிவும் திறனும் புலப்பட இளையர்க்கு எடுத்த மொழி முதுகாஞ்சியாயிற்று. வாழ்க்கையில் உறுதிப்பொருளைத் தாம் துய்த்தறிந்த நிலையில், பிறர்க்கு அறிவுரைக்கும் நெறியில் கூறாது பட்டறிவு எனும் வகையிற் கூறுவன பொருளொடு புணர்ந்த பக்கமாயின. இத்தகையன எல்லாவற்றையும், பெரியோர் அறிவுரைக்கும் தன்மையிற் கூறியன என்று கொண்டு பிற்கால இலக்கணப் பனுவலர் பொது நெற நின்று பொருண்மொழிக் காஞ்சியென்றனர். இத்துறையைக்

தொடர்ச்சி 64 ம் பக்கம் பார்க்க

ஒப்பில் வழியாற் பொருள் செய்குந

செ. வை சண்முகம்
மொழியியல் பேராசிரியர்,
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர் - 608002.

முன்னுரை :

'ஒப்பில் வழியாற் பொருள் செய்குந' என்பது இடையியல் இரண்டாம் சூத்திரத்தில் இடைச்சொற்களின் வகைகளில் கடைசியாகக் குறிப்பிட்டிருப்பது இது எதைக் குறிக்கிறிது என்பதில் நான்கு கருத்துக்கள் காணப்படுகின்றன. i) ஒப்பில் போலியாக 'போலும்' என்ற சொல் உவம உருபாகப் பயன்படாமல் பிற பொருளில் வருவது (இளம்பூரணர்), ii) 'ஒப்ப' என்ற உவம உருபு தவிர உவமையிலியல் கூறிய எல்லா உருபுகளையும் குறிப்பது (சேனாவரையர்). iii) உவமையியலில் கூறிய எல்லா உவம உருபுகள் (நச்சினார்க்கினியர், கல்லாடர் இலக்கண ஆய்வாளர்கள்) iv) மன், தில், கொன் போன்றவை (தெய்வச் சிலையார்). இந்தக்கருத்து மாறுபாட்டிற்கேற்ப இது எங்கே வருணிக்கப்பட்டிருக்கிறது என்பதிலும் மூன்று கருத்துகள்

63ம் பக்கத் தொடர்ச்சி

கற்று, கேட்போர், சூழல், பொருள் என்ற நிலையிற் பகுத்தெண்ணின், மேற்காட்டிய பல்துறையாக விரிவும். வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய மூன்றிற்கும் சில பொதுத்தன்மைகள் உள். ஒரு பாட்டில் உறுதிப்பொருள் கூறி, உலக நிலையாமை காட்டி, இன்ன நெறியனாக என அறிவுறுத்தும் புலவன் மூன்று திணைப்பொருண்மை எல்லைகளையும் தொடவேண்டியவனாகிறான். ஆகவே, கேட்போர், சூழல் ஆகியனவும் கண்டே திணை துறை மொழிந்தாகவேண்டும். அவை புலப்படா நிலையில் பொதுப்படப் பொருண்மொழிக் காஞ்சி எனல் பொருந்துவதே. செவியறிவுறூஉ, முதுகாஞ்சி, பொருளொடு புணர்ந்த பக்கம் சான்றோர் பக்கம், மாற்றருங்கூற்றம் சாற்றல் ஆகியவற்றுக்கு இடையே உள்ள இடைவெளி சிறியது; மயக்கந்தருவது. ஆதலின் இவற்றைப்பொதுவியற் பொருண்மொழிக்காஞ்சியென்றனர்.

காணப்படுகின்றன. அவையாவன: அ) இடையியல் 29 ஆம் சூத்திரத்திலும் (பிறர் பாடப்படி 30 ஆம் சூ.) ; (கருத்து i) ; ஆ) பொருளதிகார உவமை இயலிலும் (கருத்து ii & iii) ; இ) இடையியல் 4 முதல் 6 ஆம் சூத்திரங்களிலும் பிற இடங்களிலும் (கருத்து iv) வருணிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப் பட்டன.

இங்கு இரண்டு செய்திகள் குறிப்பிடத்தகுந்தவை. i) தெய்வச்சிலையார் மட்டுமே உவம உருபுகளை 'ஒப்பில் வழியாகப் பொருள் செய்குந' வனவாக மறுத்துத் தன் கருத்தை நிறுவியுள்ளார். ஏனைய கருத்துக்களை மறுத்து யாரும் தங்கள் கருத்து மட்டும் பொருந்தக்கூடியது என்று வாதிடவில்லை. ii) எதைக் குறிக்கிறது என்பதில் நான்கு கருத்துக்கள் காணப் பட்டாலும் முதன் மூன்று கருத்துக்களிடையே சில ஒற்றுமையும் வேற்றுமையும் இருப்பது சுட்டிக்காட்டத்தகுந்தது. இரண்டாவது கருத்துக்கும் மூன்றாவது கருத்துக்கும் ஒற்றுமை அதிகம் இருந்தாலும் இரண்டின் அடிப்படையும் வேறுவேறானது ; முன்னது 'சொல்' அடிப்படையிலும் பின்னது 'பொருள்' (வஸ்து object) என்ற அடிப்படையிலும் அமைந்தது. முதல் கருத்தும் இரண்டாவது கருத்தும் வேறுபட்டது போலத் தோன்றி னாலும் இரண்டுமே சொல்லின் வேர்ப்பொருள் அல்லாமல் பிற பொருளைக் குறித்து இலக்கண மாற்றம் பெறுவதையே குறிக் கின்றன. இரண்டாவது கருத்து ஒரு குறிப்பிட்ட பொருளுக்குரிய 'பல சொல் ஒரு பொருள்' என்ற நிலையிலும் அமைந்துள்ளன.

இந்த நான்கு கருத்துகளின் விளக்கத்தையும் குறை நிறை களையும் ஒவ்வொன்றாகப் பார்ப்போம் :

1. ஒப்பில் போலி :

'ஒப்பில் வழியாற் பொருள் செய்குந' என்ற அடிக்கு எந்த விளக்கமும் இளம்பூரணர் தராமல் 'முன்னே விரிக்கின்றார்' என்று கூறிவிட்டு போய்விட்டார். இடையியல் 29 ஆம் சூத்திர மான 'ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்' என்ற சூத்திர உரையிலேயே அவர்.

'மேல் இடைச்சொல் எழுவகைய என்று நிறுத்தவற்றுள் ஒப்பில்போலி என்னும் இடைச்சொல் உணர்த்துதல் நுதலிற்று. ஒப்பில் போலியாவது, ஒப்பில்லாத வழி ஒப்பித்த வாசகம்பட வருவது என்பது, வரலாறு: மங்கலம் என்பதோர் ஊருண்டு

போலும் மழநாட்டுள்' என ஒப்பில்லாத வழிப்போலும் என்னும் இடைச்சொல் வந்தவாறு.

என்று விளக்கி உரையை முடித்துள்ளார். இங்கு நான்கு உண்மைகள் அடங்கியுள்ளன. அவையாவன: 1) ஒப்பில் வழியால் பொருள் செய்குநவும் ஒப்பில் போலியும் ஒன்று; வேறு வேறானவை அல்ல. 2) ஒப்பில் போலி என்பது ஒப்புப் பொருளை உணர்த்தாத போதும் ஒப்புச் சொல்லைப் பயன்படுத்துவதே. 3) போலும் என்ற உவமஉருபாகப் பயன்படும் சொல் பிற பொருளிலும் வரலாம். 4) இதற்கு ஒரு உதாரணத்தைக் கொடுத்து அது எந்தப் பொருளில் வந்துள்ளது என்று விளக்காமல் போயிருப்பது. இருந்தாலும் ஒப்புப் பொருளைக் குறிக்காமல் ஐயப் பொருளைக் குறிக்கப் 'போலும்' என்பது இங்குக் கையாளப்பட்டிருக்கிறது என்று நாம் முடிவு செய்யலாம்.

பிற உரையாசிரியர்களும் இலக்கண ஆய்வாளர்களும் 'ஒப்பில் வழியால் பொருள் செய்குந'வும் ஒப்பில் போலியும் வேறு வேறு பொருளைக் குறிக்கின்றன என்று கருத்து உடையவர்கள்; இருந்தாலும் பின்னது 'போல்' என்ற வேர்ச்சொல்லடியாகப் பிறந்த பல சொற்களையும் குறிக்கின்றன. அவையெல்லாம் ஒப்புப் பொருளைச் சுட்டாமல் பிறபொருளைச் சுட்டுகின்றன என்ற கருத்துகளோடு அவை அசைச்சொல் என்ற கருத்தும் உடையவர்கள். எனவே i) ஒப்பில் போலி என்பது எந்தெந்த வடிவங்களைக் குறிக்கின்றன? ii) அவை என்னென்ன பொருளைக் குறிக்கின்றது? iii) அதன் இலக்கணம் என்ன? அதாவது ஒப்பில் வழியால் பொருள் செய்குநவும் இடைச் சொல்லா? அல்லது அசைச் சொல்லா? என்று மூன்று கேள்விகளுக்கும் விடை காண்பதன் மூலம் அதன் சரியான பொருளை நிர்ணயிக்க முயலுவோம்.

1. 1. வடிவங்கள்:

இளம்பூரணரும் தெய்வச்சிலையாரும் 'போலும்' என்ற ஒரு வடிவத்தையே குறிப்பிட்டுள்ளார்கள்.

'போலும்', போல்வது என்னுந் தொடக்கத்துப் பலவாய்பாடுந் தழுவுதற்குப் 'போலி' என்றார்.

என்று சேனாவரையர் விளக்கி 'நெய்போல்வதூஉம்' என்ற உதாரணத்தையும் கொடுத்துள்ளார். எனவே 'போல்' என்பதன் அடியாகப் பிறந்த எல்லாச் சொற்களும் இங்குத்

குறிக்கப்படுவதாகக் கொள்ளலாம். சங்க இலக்கியத்தின் 'போல' என்பதும் ஒப்பில் போலியாக (கலி, 112, 12) வந்துள்ளது.

1. 2. பொருள் :

உரையாசிரியர்களில் தெய்வச்சிலையார் மட்டுமே

'அவர் வந்தார் போலும் இதனுள் வந்தார் எனத் துணிந்த வழி வருதலின் அசை நிலையாயிற்று'

என்று பொருள் விளக்கமும் இலக்கண விளக்கமும் கொடுத்துள்ளார். தெய்வச்சிலையார் கொடுத்த பொருள் பொருந்துமா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால், வரமாட்டார் என நாம் எண்ணியவர் வந்தால் தான் 'அவர் வந்தார் போலும்' என்று கூறுவோம். அப்படியென்றால் ஐயம் நீங்குதல் என்று கொள்வதே பொருத்தம்.

சேனாவரையர் கொடுத்த உதாரணமான
'நெருப்பு சுழல் சேர்ந்தக்கால், நெய்போல்வதூஉம்
எரிப்பச் சுட்டு எவ்வநோய் ஆக்கும்'

என்ற நாலடியார் அடி (124) யில் நெய் போன்ற சிறந்த பொருளும்' என்று பொருள்படுவதால் 'சிறப்பு' எனக் குறிப்பிட்டோ 'இனப்பொருள்' என்று பொதுவாகவோ பொருள் இடலாம்.

நடராசனும் (1977 : 217), இசரேயலும் (1977 : 19) ஆண்டு உருகுவன் போலும் (குறுந்-222) உருகுவார் போலும் உடைந்தன்று (கலி 60) என்ற சங்க இலக்கிய உதாரணங்களைக் காட்டி 'ஐயப்பொருள்' உணர்த்துவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

'வழங்காப்பொழுது நீ கன்று மேய்ப்பாய்போல
வழங்கல் அறிவார் உரையாரே'

என்ற கலித்தொகை அடிகளில் (112, 12, 13) 'கன்று மேய்ப்பதாகப் பாசாங்கு செய்து கொண்டு வருவது' என்று பொருள்படுவதால் 'பாசாங்கு'ப் பொருள் உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

காந்தி போன்ற மனிதர்கள்

என்னும்போது காந்தி போன்ற உயர்ந்த மனிதர்கள் என்று பொருள்படுவதால் 'உயர்வு—ஒப்பு' என்று கொள்ளலாம். அதே

போல் கோட்சே போன்ற மனிதர்கள்! என்ற தொடரில் 'இழிவு-ஒப்பு, பொருள்படும். எனவே 'போல்' என்ற வேர்ச்சொல் அடியாகப் பிறந்த சொற்கள் உவம உருபாக மட்டும் பயன்படாமல் பிறபொருளிலும் வருகின்றன என்பதை உணர்த்தவே இந்தச் சூத்திரம் செய்யப்பட்டிருக்கிறது.

1. 3. இலக்கணம்

மேலே குறிப்பிட்டபடி இளம்பூரணர் மட்டுமே 'போலும்' என்பது ஒப்பில் மொழியாற் பொருள் செய்யும் இடைச் சொல் லாகக் கொள்ள பிறர் எல்லோரும் அசைச் சொல்லாகவே கொண்டுள்ளார்கள். இதற்கு முக்கிய காரணம் 'ஒப்பில் போலி யும் அப்பொருட்டாகும்' என்ற சூத்திரத்தில் உள்ள 'அப் பொருட்டாகும்' என்ற தொடர் 'ஆங்க உரையசை' என்ற முன் சூத்திரத்தை மாட்டெறிந்ததாகக் கருதியதுதான். 'ஆங்க' என்பது உரையசையாக வந்ததாக இலக்கிய உதாரணங்களை உரையாசிரியர்களே கொடுத்துள்ளார்கள். ஆனால் 'போலும்' என்பது உரையசையாக வருருவதற்கு எந்த உதாரணமும் வரவில்லை. அவர்கள் 'போலும்' என்பதற்குக் கொடுத்த உதாரணங்கள் (மேலே குறிப்பிடப்பட்டவை) 'உரையசை' என்று கொள்ள முடியாது.

உரையசை என்பது சிலர் பேச்சைத் துவங்கும்போதோ அல்லது இடைஇடையேயோ சில சொற்களை வெற்றுச் சொற்களாகப் பயன்படுத்துவது. போலும் என்பது உரையசையாகப் பயன் படுத்தப்பட்டதென்பது சந்தேகமாக உள்ளது. மேலும் பிற பொருளில் வரும் இலக்கிய வழக்குக்கும் பேச்சு வழக்குக்கும் இலக்கணம் இல்லாமல் போய்விடும். எனவே 'அப்பொருட்டாகும்' என்பது ஒப்பில் வழியாகப் பொருள் செய்குந' என்பதை மாட்டெறிந்து வந்ததாகக் கொள்ளலாமா என்று நினைக்கத் தோன்றுகிறது. இப்படிக் கொண்டால் மொழி அமைப்பில் இது ஒரு புதிய உண்மையை உணர்த்துவதாகவும் அமையும். அதாவது ஒருசொல் அதன் வேர்ப்பொருள் இல்லாமல் பிற பொருளிலும் வரும் என்பதும் அதனால் அதன் இலக்கணத் தன்மை (பகுபத மாக இருப்பது பகாப்பதமாகவும் வினைச்சொல்லாக இருப்பது இடைச்சொல்லாகவும்) மாறுபடும் என்பதும் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம். ஆகவே 'ஒப்பு' என்பது தவிர வேர்ப்பொருள் இல்லாமல் பிறபொருள்- உணர்த்தும் சொற்களும் வருவதற்கு இடம் அமைந்துவிடுகிறது.

2. 'ஒப்ப' நீங்கிய உவம உருபுகள் :

சேனாவரையர் 'ஒப்பில் வழியால் பொருள் செய்குந' என்ற அடியை விளக்கும்போதே இந்தக் கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

'ஒப்புமை தோன்றாவழி அவ்வொப்புமைப் பொருள் பயப்பன'

என்பது அவருடைய பொழிப்புரை. இங்கு இரண்டு உண்மைகள் எடுத்துக் காட்டத் தகுந்தவை : 1) 'ஒப்புமை' என்று பொருளைக் குறிப்பிட்டுள்ளாரே தவிர 'ஒப்புமையைக் குறிக்கும் சொல் என்று குறிப்பிடாதது. 2) சூத்திரத்தில் 'பொருள்' என்று பொதுவாக இருக்க, சேனாவரையர் 'அப்பொருள்' என்று பதிலீட்டுப் பெயரைப் பயன்படுத்தி மாட்டெறிவதாகக் கொண்டது என்றாலும் பொழிப்புரை உவம உருபுகளைக் குறிக்கும்படி அமைக்கப்படவில்லை.

'ஒக்கும் என்னும் சொல் அன்றே ஒப்புமை உணர்த்துவது ; அச்சொல் ஆண்டு இன்மையான் ஒப்புமை தோன்றாமையான் 'ஒப்பில் வழியால்' என்றார். உவமையோடு பொருட்கு ஒப்பில்லை என்றாரல்லர் என்பது. ஒக்கும் என்னும் சொல்லை 'ஒப்பு' என்றார் என்பாரும் உளர். ஒப்பில் வழியாற் பொருள் செய்குநவாவன : அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப, என்பன முதலாகப் பொருளதிகாரத்துள் (உவமை (1) கூறப்பட்ட முப்பாதாறனுள் 'ஒக்கும்' என்பது ஒழிய ஏனையவாம்.

என்பது அவருடைய விளக்கவாசகம். இங்கு ஒரு பொருளை உணர்த்த அந்தப் பொருளை வேர்ப்பொருளாக உடைய சொல்லை மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும் ; அப்படிக் கையாளாமல் வேறு வேர்ப்பொருளை உடைய சொற்களையும் உபயோகிக்கலாம் என்று வழி வகுக்கிறது இந்த அடி என்பதே சேனாவரையரின் விளக்கத்தின் சாரம். ஆனால் சேனாவரையர் 'ஒப்பு' என்ற பொருளைப் பற்றி மட்டும் பேசுவதாகக் கொண்டதாலேயே உவம உருபுகள் மட்டும் இங்கு குறிப்பிடப் பட்டதாக விளக்கியுள்ளார். இங்கு பொதுவாக இரண்டு கேள்விகள் எழுகின்றன. அவையாவன : 1) ஒரு சொல் எப்பொழுதும் வேர்ப்பொருளை உணர்த்தவேண்டும் என்பது பொருந்துமா ? 2) தொல்காப்பியர் வேறு எங்கேயாவது வேர்ப் பொருள் இல்லாமல் பிறபொருளில் வருவதை வருணித்துள்ளாரா?

முதல் கேள்விக்கு எதிர்மறையாகவும் இரண்டாவது கேள்விக்கு உடன்பாடாகவும் பதில் அளிக்கலாம்.

1. அ) சொல்லுக்கும் பொருளுக்குமுள்ள உறவு இடுகுறித் தன்மையானது என்பது இலக்கண ஆசிரியர்கள் எல்லோருக்கும் உடன்பாடானதே. எனவே எந்தச் சொல்லாலும் எந்தப் பொருளையும் குறிக்கலாம் என்றாலும் மொழி சமூக உறவுக்கு அடிப்படை ஆதாரமாய் இருப்பதால் சொல்லைப் பயன் படுத்துவதில் சில மரபுகள் கடைப்பிடிக்கப்படவேண்டும். அதே சமயத்தில் அந்த மரபுகளை முழுவதும் மாற்றாமல் கொஞ்சம் மாறுபட்ட பொருளில் கையாளுவதே மொழியின் படைப்பாற்றலை (creative force) வெளிப்படுத்துவதாக அமையும். அந்த முறையில் சிறிய சிறிய மாற்றமாக ஏற்பட்டே பெரிய மாற்றம் - முழுப்பொருளின் மாற்றம் அமையும். அந்த வகையில் உவம உருபுகளாகக் கூறியவற்றைக் கவனித்தால் அவை ஒப்புமைப் பொருளை வேர்ப்பொருளாகக் கொண்டிருக்கா விட்டாலும் ஏதோ ஒரு வகையில் பொருள் தொடர்பு இருப்பதை உணரலாம். உதாரணமாக 'ஒட்ட (ஒட்டு = பொருந்து); 'புல்ல' (புல் = பொருந்து) 'ஒன்ற' (ஒன்று = பொருந்து) ஆகியவை ஒற்றுமைப் பொருளை உடையதால் உவம உருபாகப் பயன்படுத்துவதில் பெரிய பொருள் மாற்றம் ஏற்படவில்லை. உவமைகள் எப்பொழுதும் ஒப்பு மட்டும் உணர்த்தாமல் உறழ்வுப் பொருளையும் காட்டும் (காக்கையின் கரியது களம்பழம்). எனவே, உறழ், வெல் போன்ற வினையடிகளும் உவம உருபு களாகப் பயன்படுவதையும் பொருள் தொடர்பு உடையதாகக் கொள்ளலாம். இப்படி எல்லா உவம உருபுகளுக்கும் இன்று விளக்கம் கொடுக்க முடியாவிட்டாலும் ஏதோ ஒரு வகையில் பொருள் தொடர்பு இருந்ததாலேயே அந்தச் சொற்கள் உவம உருபுகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும் என்று கருத இடம் உண்டு. விளக்க நிலையில் பார்க்கும்போது, வெறும் பொருள் மாற்றம் மட்டும் அல்லாமல் அகராதிப் பொருள் இலக்கணப் பொருளாக மாறுவதால் இலக்கணத்திலும் பகுபதம் பகாப்பதமாக மாறி, சொல் வகைப்பாட்டிலும் வினைச் சொல்லாக இருப்பது இடைச்சொல்லாக மாறிவிட்டதாகக் கருதும் படி அமைந்துவிடுகிறது. சேனாவரையர் வெறும் சொற் பொருள் மாற்றத்தை மட்டும் குறிப்பிட்டாலும் பொதுப்பொருள் மாற்றம் (அகராதிப் பொருள் இலக்கணப் பொருள்), இலக்கண மாற்றம் (பகுபதம்,பகுபதமாக) சொல்வகைப்பாட்டு மாற்றம்(வினைச்சொல் இடைச்சொல்லாக) ஆகியவற்றைப் பெறுவதாலேயே இலக்கண

முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகிவிட்டது. அதனால்தான் தொல்காப்பியர் இடைச்சொற்களில் இது தனிவகையைச் சார்ந்தது என்று கொண்டு விளக்கியிருக்கவேண்டும்.

2. அ) எற்று என்ற சொல் 'எத்தன்மைத்து' என்று பொருள்படும் குறிப்புவினைமுற்று. ஆனால் 'இறந்தற்பொருட்டு' என்று பொருள்மாற்றம் பெற்றதால் இடைச்சொல்லாகக் கருதி இடையியலில் 'எற்று என் கிளவி இறந்த பொருட்டே' என்று (சூ. 15) சூத்திரம் செய்துள்ளார். அந்தில் என்ற சொல் 'ஆங்கு' என்ற இடப்பொருள் பெற்றும் அசைநிலையாகவும் வரும் என்று இடையியலிலே ஒரு சூத்திரம் *(19)* செய்துள்ளது வேர்ப் பொருளையும் பிறபொருளையும் உணர்த்தலாம் என்பதை அவரே உணர்ந்துள்ளதைப் புலப்படுத்தும். எனவே சொற்கள் வேர்ப் பொருளை இழந்து பயன்படுவதால் இலக்கணப் பண்பும் மாறுகின்றன என்பதை உணர்ந்துள்ளதை இந்த அடி பொது நிலையில் கூறுவதாகக் கொள்ளலாம்,

இந்தக் கருத்தைச் சுப்பிரமணிய சாஸ்திரியும் *(1945 : 226)* வெள்ளைவாரணனாரும் *(1971 : 295)*, செயராமனும் *(1972 : 263)* ஆதரித்துள்ளார்கள்.

3. எல்லா உவம உருபுகளும் :

நச்சினார்க்கினியரும் அவரை ஒட்டிக் கல்லாடரும் இலக்கண ஆய்வாளர்களில் இசரயேல் *(1973 : 271 ; 1977:6)* ; ஆதித்தர் *(1977 : 160)*, நடராசன் *(1977 : 196,)* ஆண்டியப்பன் *(1977 : 108)*, பாலசுந்தரம் (பார்க்க, சிவலிங்கனார் *(1988 : 37)*, சிவலிங்கனார் *(1988:37)* ஆகியோரும் எல்லா உவம உருபுகளும் உள்ளடங்கியதாகக் கருதுகிறார்கள். இங்கு நச்சினார்க்கினியரின் பொழிப்புரையும் விளக்கவுரையும் தனித்துவம் வாய்ந்தது. பிறர் எல்லோரும் பொழிப்புரையில் சேனாவரையரையும் விளக்கத்தில் 'நச்சினார்க் கினியரையும் தழுவியுள்ளார்கள்.

'நாடக வழக்கினான் உய்த்துணரின் இன்றி உலகவழக்கினாற் காட்டப்படுவதோர் ஒப்பு இன்றி ஒப்புமைப் பொருண்மையை உணர்த்தி வரும் உவம உருபுகள்'

என்பது நச்சினார்க்கினியருடைய பொழிப்புரை வாசகம். இங்கு இரண்டு செய்திகள் எடுத்துக் காட்டத் தகுந்தவை: 1) 'ஒப்பு' எனபதற்கு இலக்கண நோக்கில் அல்லது சொல்

நோக்கில உரை எழுதாமல் பொருள் (பொருளதிகாரம்) நோக்கில் விளக்கம் கொடுத்திருப்பது ; 2) 'பொருள்' என்று மூலத்தில் இருப்பதற்கு இவரும் சேனாவரையரைப்போல் 'ஒப்புமைப் பொருள், கொண்டிருப்பது. முன்னதற்குக் காரணம் 'ஒப்பு' என்ற சொல் நச்சினார்க்கினியருக்கு.

'ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா
....
நாட்டியல் மரபின் நெஞ்சு கொளின் அல்லது
காட்ட லாகாப் பொருள என்ப'

என்ற பொருளதிகார சூத்திரத்தை (பொருளியல் 51) நினைவுபடுத்தியிருக்க வேண்டும். இந்தச் சூத்திரத்தை அவரே உரை விளக்கத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

'ஒப்பில் வழியால் பொருள் செய்யும் உவம உருபுகள் அன்ன ஏய்ப்ப என்னும் சூத்திரத்தான் உவமை இயலுட் (11) கூறுப. அவை ஒப்பின்றி ஒப்புணர்த்துதல் 'ஒப்பும்', உருவும், வெறுப்பும் என்றா' என்னும் பொருளியற் சூத்திரத்தால் உணர்க.

என்ற அவருடைய உரை வாசகம் பொழிப்புரை வாசகத்துக்கும் விளக்கமாக அமைந்து வருகிறது. இருந்தாலும் சொல்திகாரத்தில் உவமையைப்பயன்படுத்துவதற்குக்கையாளும் உவம உருபுகளை நேரடியாகப் பேசாமல், உவமை எந்த நிலையில் கையாளப்படுகிறது என்று விளக்குவது சிறப்பாகக் கொள்ள முடியாது. இருந்தாலும் எல்லா உவம உருபுகளும் இங்கு விவரிக்கப்பட்டதாகக் கருதுவது ஒரு வகையில் இலக்கண விளக்கமாக அமைந்ததாலேயே பிற்கால அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது ; ஆனால் அவருடைய பொழிப்புரை பின்வந்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதே சமயத்தில் நச்சினார்க்கினியரின் பொழிப்புரையும் விளக்கவுரையும் முரண் இல்லாமல் அமைந்தது போலப் பிற உரைகள் அமைய வில்லை என்பதும் சுட்டிக்காட்டத் தகுந்தது.

உதாரணமாக

'ஒத்த என்னும் வாய்பாடு தன்கண் நில்லாத கூற்றானே நின்ற ஒப்புமைப் பொருண்மையை உணர்த்தி வருவன'

என்ற கல்லாருடைய பொழிப்புரை சேனாவரையர் கருத்தைத் தழுவியது.

(தொடரும்)

தமிழ் நாள், கிழமை, திங்கள் இதழ்களில் எழுதுவோரின் சிந்தனைக்கு

* முனைவர் ச. முத்துக்குமரன்

நாள், கிழமை, திங்கள் இதழ்களை மக்கள் எதற்காகப் படிக்கிறார்கள் ?

1. பொது அறிவைப் பெருக்கிக் கொள்ளவும்
2. மொழி அறிவைப் பெருக்கிக் கொள்ளவும்
3. நாட்டு நடப்பை அறிந்து கொள்ளவும்
4. புதிய புதிய கருத்துக்களை அறிந்து கொள்ளவும்
5. நல்ல புனைகதைகளைப் படித்து வாழ்வியல் அறிவுபெறவும்
6. நகைச்சுவை போன்ற பல சுவைகளை அனுபவித்து மகிழவும்

இன்னும் இவைபோன்ற பல காரணங்களுக்காகவும் இதழ்களை மக்கள் படிக்கிறார்கள். மக்கள் இவ்வாறான பயன்பெற வேண்டி, இதழ் வெளியிடுபவர்களே நல்ல வெளியீட்டாளர்கள். வீணே பொழுதைக் கழிப்பதற்கும், ஊர் வம்பை அறிந்து கொள்ளவும் படிப்பவர்கள் உண்டு. அவர்கள் நிலத்திற்குப் பாரமாக வாழ்பவர்கள். அவர்களுக்கும் விலங்குகளுக்கும் அதிக வேற்றுமையில்லை. அவர்களுக்கென்றும் நாள், கிழமை, திங்கள் இதழ்கள் வெளியிடப்படுகின்றன. அவற்றைப் பற்றியும் அவர்களைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. மக்களாகப் பிறந்தும் மக்களாக வாழாதவர்களைக் கண்டுஇரக்கப்படலாம். சிலர் அவர்களின் குறைகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு வாழ்கின்றனர்; அவர்கள் இழிந்தோராவர். அவர்களைக் கண்டு இரங்கி அவர்களுக்கு இறைவன் நல்வழி காட்ட வேண்டும் என்று எண்ணுவதே நாம் செய்யத்தக்கதாகும்.

முன்னர் குறிப்பிட்ட ஆறு குறிக்கோள்கள் கொண்ட இதழ்கள் எவை ? அவற்றை எவ்வாறு இனம் காண்பது ? நல்ல இதழ்கள் எவ்வாறு இருக்கவேண்டும் ? என்பதைப் பற்றிச் சிந்திப்போம்.

" செய்வன திருந்தச் செய் " என்றனர் நம் முன்னோர். எந்த மொழியில் எழுதினாலும் அந்த மொழியின் இலக்கண

* துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

விதிப்படி, தவறின்றி எழுதவேண்டும். கொச்சையாக எழுதியவற்றைப் படிப்போரின் மொழி அறிவு பாழாகும். மற்ற மொழிச் சொற்களைத் தேவையின்றிக் கலந்து எழுதியதைப் படிப்போரின் பொது அறிவும் மொழி அறிவும் தாழ்ந்து போகும்.

நம் மொழியில் தக்க சொல் இருக்கும் போது அதைப்பயன் படுத்தாது வேற்று மொழிச் சொல்லைப் பயன்படுத்தினால் நாம் நம்மொழிச் சொல்லை இழக்கிறோம். மொழிக்கு ஒரு புதிய சொல் வந்தாலும் பழைய சொல் ஒன்றை இழந்து விடுவதால் மொழிக்கு நன்மையில்லை. படிப்பவர்களுக்கு நன்மையில்லை. மேலும் நம் மொழி கலப்படத்தால் தன் இயல்பை இழக்கிறது. நாமும் எதையும் திருந்தச் செய்யும் பழக்கத்தை இழக்கிறோம்.

ஒரு மொழி அம்மொழி பேசும் மக்களின் கலையையும் பண்பாட்டையும் காட்டும் கண்ணாடி எனலாம். நாம் நம் மொழிச் சொற்களை இழந்து அவற்றிற்குப் பதிலாக வேற்று மொழிச் சொற்களை நம் மொழி அமைப்புக்கு ஏற்ப மாற்றாமல் பயன்படுத்துவதால் நம் கலைகளையும் பண்பாட்டையும் இழக்கும் சூழ்நிலை உருவாகும். மொத்தத்தில் நம்மொழியில் சொற்கள் இருக்கும்போது அவற்றைப் பயன்படுத்தாது பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தும்போது நாம் நம் மொழியையும் இழந்து நம்மையும் இழக்கிறோம்.

தமிழ் நாட்டில் தமிழில் வெளிவரும் ஒரு பெயர் பெற்ற கிழமை இதழை ஒரு மாதிரிக்காக எடுத்துக்கொண்டு ஆராய்ந்தோம். அவ்விதழில் மூன்று மாதங்களில் (சனவரி 1991 முதல் மார்ச்சு 1991 முடிய வெளி வந்த இதழ்களில்) மூன்று முறையோ அல்லது அதற்கு மேலோ பயன்படுத்தப்பட்ட ஆங்கிலச் சொற்களைப் பட்டியலிட்டோம். அச்சொற்பட்டியல் இக்கட்டுரைக்கு இணைப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் சில சொற்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை எத்தனை முறை பயன்படுத்தப்பட்டன என்பதும் அவற்றிற்குச் சரியான தமிழ்ச் சொற்களும் பக்கத்திலேயே கொடுக்கப் பட்டுள்ளன.

அட்வான்ஸ்	7	முன் பணம், முன்னேற்றம்
ஆர்ட்டிஸ்ட், ஆர்டிஸ்டு	9	கலைஞர்
ஆபீஸ்	51	அலுவலகம்
இங்கிலீஸ்	16	ஆங்கிலம்

இன்டர்வியு	15	நேர்முகத்தேர்வு
இன்ஸ்பெக்டர்	9	ஆய்வாளர், காவல் அதிகாரி
இன்ஸல்ட்	9	நிந்தை, அவமரியாதை(வசைமொழி
ஈகோ	4	அகங்காரம், தன் முனைப்பு
எடிட்டர்	6	பதிப்பாசிரியர்
எம்டி	6	மேலான் இயக்குநர்
ஓகே	10	எல்லாம் சரி, ஆம்
ஓட்டல், ஹோட்டல்	38	உணவு விடுதி, உணவகம்

இத்தமிழ்ச் சொற்கள் யாவும் ஓர் எளிய பள்ளி மாணவனுக்கும் தெரிந்தவையே. நம் நாள் இதழ்களிலே அவை அடிக்கடி பயன் படுத்தப்படுபவையே. இருந்தாலும் கனியிருக்கக் காய் கவருமாறு போல நல்ல தமிழ்ச் சொல்லை விடுத்து வேற்று மொழிச் சொல்லைச் சிலர் பயன்படுத்துவது ஏன்? அதுதான் நாகரிகம் என்று நினைப்பவர் சிலர். தன் வேற்று மொழி அறிவை விளம்பரப்படுத்த விழைபவர் சிலர். அந்தச் சொல்தான் பொருத்தம் என்று விவாதிப்போர் சிலர். இன்னும் சிலர் ஒருபடி மேலே போய் இவ்வாறு எழுதுவதன் வாயிலாகத்தான் தமிழை வளர்க்க முடியும் என்றும் பேசி வருகின்றனர். உண்மையான காரணம் என்ன என்பது சிந்திப்பவர்களுக்குத் தெரியும். கற்றவனுக்கும் மற்றவனுக்கும் உள்ள வேற்றுமை கற்றவன் மொழியில் தூய்மை இருக்கும். மற்றவன் மொழி கொச்சையாக இருக்கும். ஒருவர் எழுதியதில் பயன்படுத்திய வேற்றுமொழிச் சொற்களைப் பட்டியலிட்டு அவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்கள் உள்ளனவா என்று பார்த்தல் வேண்டும். அவர் பயன்படுத்திய சொற்கள் பொருத்தமானவையா? அல்லது வேண்டாதனவா? என்று காணல் வேண்டும். அப்போதுதான் அவர் தமிழை வளர்க்கிறாரா? அல்லது சிதைக்கிறாரா? என்பது விளங்கும். நாமும் அவரை யார் என்று இனம் காணமுடியும்.

மொழிக் கலப்பால் வரும் தீங்குகளை நாம் விளக்கும்போது சிலர் ''ஆங்கிலத்தைப் பாருங்கள்; ஆங்கிலம் மற்ற மொழிச் சொற்களின் கலப்பை ஏற்றதால் அல்லவா வளர்ந்தது? நாமும் அவ்வாறு மற்ற மொழிச் சொற்களின் கலப்பை ஏற்றால்தான் தமிழ் வளரும்'' என்று எதிர் வழக்காடுவர். இவ்வாறு அவர்கள் ஏன் ஒரு பெரும் பொய் வழக்காடுகிறார்கள் என்பது விளங்க வில்லை. ஆங்கிலத்தில் மற்ற மொழிச் சொற்கள் ஆளப் பெறுகின்றன என்பது உண்மை. ஆனால் அவர்கள் தங்கள் மொழிச் சொற்களுக்கு மாற்றாக வேற்று மொழிச் சொற்களைப்

பயன்படுத்துவது இல்லை. ஆங்கிலேயன் யாரும் "Turn Left" என்பதை "Turn Edappakkam" என்று எழுதுவது இல்லை ஏன் தமிழில் "லெப்ட்லே கட் பண்ணிப் போ" என்று எழுதுபவர் கூட ஆங்கிலத்தில் எழுதும் போது அப்படி எழுதுவது இல்லை. இவர் எழுதிய "லெப்ட்லே கட் பண்ணிப் போ" என்பதை ஆங்கில எழுத்துக்களில் ஒலி பெயர்த்து எழுதினால் அதாவது "Leftle cut pannippo" என்று எழுதினால் அது ஆங்கிலம் ஆகாதா என்று கேட்டால் இவர் பதில் என்னவாக இருக்கும்? மேலும் ஆங்கிலத்தில் சேர்த்துக் கொண்ட மற்ற மொழிச் சொற்கள் யாவும் ஆங்கிலப்படுத்தப்பட்டே சேர்த்துக் கொள்ளப் படுகின்றன. கிரேக்க, இலத்தீன் சொற்கள் மட்டும் அல்ல தமிழ்ச் சொற்கள் கூட ஆங்கிலப்படுத்தப்பட்டிருப்பதை நாம் பார்க்கலாம். கட்டுமரம் என்ற சொல் கட்டமரான் (Catamaran) என்றுதானே எடுத்தாளப்படுகிறது? கடைசியாக ஆங்கிலப்படுத்தாத அல்லது அவர்கள் நாட்டில் பயன்படுத்தாத ஒரு வேற்று மொழிச் சொல்லை நாம் ஆங்கிலத்தில் பயன்படுத்தினால் அதை சாய்ந்த எழுத்துக்களில் எழுதவேண்டும் என்று விதி இருப்பதால் அவ்வாறுதானே நாம் ஆங்கிலத்தில் எழுதுகிறோம். ஆகவே இன்று தமிழில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து எழுதுவதைப் போல-இன்றும் சரி என்றும் சரி-ஆங்கிலத்தில் ஆங்கில நாட்டில் செய்யவில்லை என்பதை நம்மவர்கள் உணரவேண்டும்.

மேலும் இக்கட்டுரையுடன் இணைத்துள்ள பட்டியல் தயாரிக்கும்போது, "காபி, கிலோ மீட்டர், சாக்லேட், சிகரெட், விட்டர்" போன்ற பொதுவழக்கில் உள்ள ஆங்கிலச் சொற்கள் சேர்க்கப்படவில்லை. மற்ற சொற்கள் யாவும் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டன. சிலர் இப் பட்டியலில் உள்ள சில ஆங்கிலச் சொற்கள் அவற்றிற்குச் சரியான தமிழ்ச்சொற்களைவிட நன்றாக விளங்குவதாகச் சொல்லக்கூடும் மேலும் சில ஆங்கிலச் சொற்களுக்கு எதிராகக் கொடுக்கப்பட்ட தமிழ்ச் சொற்கள் பொருளை விவரிப்பனவாக உள்ளன என்றும் குறை கூறலாம். எடுத்துக் காட்டாகக் கீழ்வரும் சொற்களைச் சொல்லலாம்.

ஆட்டோ ஆட்டோரிக்ஷா	—	பொறியூர்தி, தானியங்கி (வண்டி)
ஐஸ்கிரீம்	—	குளிர் பாற்குழம்பு, குளிர் பாலேடு
கிரிக்கெட்	—	மரப் பந்தாட்டம்
சோபா	—	சாய்விருக்கை
டப்பிங்	—	வேற்றுமொழிப்பதிவு
டிசைன்	—	வரையுரு, தினுசு, உருமாதிரி

வெளிநாட்டிலிருந்து நமக்குக் கிடைத்த பொருட்களுக்கு வேற்றுமொழிப் பெயர்கள் இருப்பது நியாயமே. போன நூற்றாண்டிலே மேலை நாடுகளில் இருந்து வந்த எலக்ட்ரிசிடி (Electricity) மின்சாரமாகவும், டிரெயின் (Train) புகைவண்டியாகவும் தமிழில் மொழி பெயர்க்கப்படவில்லையா? அங்ஙனமே, மற்ற சொற்களையும் மொழிபெயர்க்கமுடியும் என்பதில் ஐயமில்லை. நாம் நம்முடைய சோம்பலினால் அவசியமின்றிப் பல பிறமொழிச்சொற்களைப் பன்படுத்துகிறோம்.

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து (திருக்குறள் 603)

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும். (திருக்குறள் 608)

என்றார் வள்ளுவர். அஃதாவது அழிக்கும் இயல்புடைய சோம்பலைத் தன்னிடம் கொண்ட அறிவில்லாதவன் பிறந்த குடி அவனுக்கு முன் அழிந்துவிடும். நல்ல குடியில் பிறந்தவனிடம் சோம்பல் வந்து பொருந்தினால், அஃது அவனை அவனுடைய பகைவர்க்கு அடிமை ஆகுமாறு செய்துவிடும்.(மு. வரதராசனார் - திருக்குறள் தெளிவுரை). நாமும் சோம்பலுக்கு இடம் கொடுத்தால் அது நம் மொழியையும், அதன் விளைவாகப் பண்பாட்டையும், கலைகளையும் அழித்துவிடும்.

தமிழுக்கும், தமிழருக்கும் நன்மை செய்ய விழைவோரும் நல்ல குறிக்கோளுடன் இதழ்கள் நடத்துவோரும் இக்கட்டுரையின் முடிவில் இணைக்கப்பட்டுள்ள சொற் பட்டியலைக் காண வேண்டுகிறேன். மேலும் வேண்டிய அளவுக்கு இப்பட்டியலை விரிவாக்கிக் கொள்ளவும் வேண்டுகிறேன்.

நாமும் நம் வழித்தோன்றல்களும் நல்ல தமிழராக வாழவும் நம் பண்பாடும் கலைகளும் வளரவும் தக்க முயற்சியை மேற்கொள்வது நம் கடமையாகும். தமிழ் எழுதுவோர் சிந்திக்க வேண்டுகிறேன். நமக்கு இக்கடமையைப் பற்றிச் சிந்திக்கவும், அக்கடமையை நிறைவேற்ற முயற்சி எடுக்கவும் இறைவன் அருளை வேண்டுகிறேன்.

இக்கட்டுரையின் இணைப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலைத் தயாரிக்க, பாரதிதாசன் பல்கலைக்கழக எழுத்தர்

செல்வி. புவனேசுவரி செய்த உதவிக்கும், இக்கட்டுரையை எழுத பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் மா. இராமலிங்கம் அவர்கள் செய்த உதவிக்கும் எனது நன்றி உரித்தாகுக.

பட்டியல்

அட்ஜஸ்ட்	6	இணங்கு, இடத்துக்கேற்ப பொருத்திக்கொள்
அண்ட்	8	மற்றும்
அட்ரஸ்	3	முகவரி
அகடமி, அகாடமி	4	கல்விக்கழகம்
அப்ளிகேஷன்	9	வேண்டுகோள், கோரிக்கை, விண்ணப்பம்
அசிஸ்டண்ட், அஸிஸ்டெண்ட்	5	உதவியாளர்
அரெஸ்ட், அரஸ்ட்	3	கைது
அபார்ட்மெண்ட்	4	(வரிசையில் அமைந்த) தனியறை
அவார்டு, அவார்ட்	10	பரிசு, விருது
அட்வைஸ்	4	நல்லுரை, அறிவுரை, ஆலோசனை
அட்வான்ஸ்	7	முன்னேற்றம், முன்பணம்
அயர்ன்	6	இரும்பு, பெட்டி
அபார்ஷன்	3	கருச்சிதைவு
ஆட்டோ, ஆட்டோரிக்ஷா	21	பெர்றியூர்தி, தானியங்கி (வண்டி)
ஆர்டர்	5	ஆணை
ஆபீஸ், ஆஃபீஸ்	51	அலுவலகம்
ஆபரேஷன், ஆபரேசன்	5	அறுவைசிகிச்சை
ஆர்டிஸ்ட், ஆர்டிஸ்டு	9	கலைஞர்
ஆல் இண்டியா	3	அகில இந்திய, அனைத்திந்திய
ஆக்ஷன்	5	செயல்
ஆட்டோகிராப், ஆடோகிராப்	6	கையெழுத்து, கையொப்பம்
ஆடியன்ஸ்	4	பார்வையாளர், கேட்போர், அவையோர்
இம்ப்ருவ்	3	செம்மைப்படுத்து, மேம்படுத்து
இன்டர்வ்யூ, இன்ட்டர்வியூ, இன்டர்வ்யு	15	நேர்முகத்தேர்வு
இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்	3	தொழிற் பண்ணை

இன்ஸ்பெக்டர்	9	ஆய்வாளர், காவல் அதிகாரி
இன்ஸல்ட்	9	நிந்தை, அவமரியாதை, வசைமொழி, இகழுரை
இனிஷியல்	4	சுருக்கக்கையெழுத்து, முதல் (பெயரின்) முதல் எழுத்து
இங்கிலீஷ், இங்லீஷ்	16	ஆங்கிலம்
இன்ட்டரஸ்ட், இன்ட்ரஸ்ட்	5	அக்கறை, ஊக்கம், ஆர்வம், சிரத்தை
இமிகிரேஷன்	4	குடிவந்தேறுதல்
இன்ஸ்ட்டிட்யூட்	4	நிலையம், கழகம், ஏற்படுத்து, நிறுவு
இன்ஸ்பயர்	4	ஊக்கமளி, உணர்ச்சியூட்டு
இன்ஸ்யூரன்ஸ்	5	காப்பீடு, உறுதிசெய், உறுதிப்படுத்திக்கொள்
இன்ஞ்சினியரிங்	4	பொறியியல்
இன்ஞ்சினியர், எஞ்சினியர்	7	பொறியியல் வல்லுநர்
இமேஜ்	5	உருவம், படிவம், படிமம், மனச்சித்திரம்
இமோஷன்	5	தீவிர உணர்ச்சி, மனக்கிளர்ச்சி
ஈகோ	4	தன்முனைப்பு, அகங்காரம்
எக்ஸ்பிரஸ்	5	விரைவு வண்டி, விரைவூர்தி
எக்ஸர்ஸைஸ்	4	உடற்பயிற்சி
எடிட்டர்	6	பதிப்பாசிரியர்
எலெக்ட்ரானிக், எலக்ட்ரானிக்ஸ்	4	மின்னணுவியல்
எஸ். எஸ். எல். சி.	4	பள்ளி இறுதித்தேர்வுச் சான்றிதழ்
எம். டி.	6	மேலாண் இயக்குநர்
எக்ஸ்பர்ட்	3	வல்லுநர், திறனி, தனித்திறனாளர்
ஐடியா	8	கருத்து, எண்ணம்
ஐ ம் ஸாரி	3	நான் வருந்துகிறேன், என்னை மன்னியுங்கள்
ஐஸ்க்ரீம்	10	குளிர்-பாற்குழம்பு, குளிர்-பாலேடு
ஓரிஜினல்	3	அசல், மூலம்
ஓ. கே.	10	எல்லாம் சரி, ஆம்

ஓ. சி	3	இலவசம்
ஓட்டல், ஹோட்டல்	38	உணவுவிடுதி, உணவகம்
ஃப்ரி	4	தடையின்றி, தாராளமாக
ஃபெயில், பெயில்	6	தோல்வி
ஃபாதர்	4	தந்தை, அருட்தந்தை
ஃபீல்டு, பீல்டு	7	துறை
ஃப்ளாட், பிளாட், பிளாட்ஸ் ப்ளாட்	15	மனை
ஃபேமிலி, ஃபாமிலி	3	குடும்பம்
ஃபார்	3	பதிலாக
ஃப்ரொபசர், புரபஸர்	4	பேராசிரியர்
ஃபைல்	3	கோப்பு
ஃப்ளோர்	6	மாடி
ஃப்ளைட், பிளேன்	5	விமானம், வானூர்தி
ஃப்ரண்ட்ஸ், ப்ரண்ட், பிரண்ட்ஸ், ப்ரெண்ட், ப்ரெண்டு	11	நண்பர்கள், நண்பன், தோழன்
ஃபாரின்	3	வெளிநாடு
ஃபுல்	3	முழுதும்
க்யூ, கியூ	7	வரிசை
கங்கிராசுலேஷன்ஸ், கங்ராங்சுலேஷன்ஸ், கங்கிராட்ஸ்	3	வாழ்த்துக்கள்
கவுண்ட்டர்	4	கணக்கன், பணம் செலுத்துமிடம், வினை முகப்பு, வழங்கு முகப்பு
கமர்ஷியல்	3	வர்த்தக, வணிக, வாணிக
கவர்	6	உறை, தன்னகப்படுத்து, தன்வசப்படுத்து
கம்பீட்	3	போட்டியிடு
கலர்	28	வண்ணம்
கமான்	3	வா
கவர்மெண்ட்	8	அரசாங்கம், அரசு
கட் (பண்ணு)	3	நிறுத்து
கவர்னர்	12	ஆளுநர்
கம்ப்யூட்டர்	19	கணிப்பி, கணினி
கம்பெனி	17	கூட்டுக்குழு, நிறுவனம், துணை, கூட்டாளி
கம்பிளெயிண்ட்	4	புகார்கூறு, முறையிடு

கம்யூனிசம், கம்யூனிஸம் கம்யூனிஸ	5	பொதுவுடைமைக் கொள்கை
கம்யூனிஸ்ட்	15	பொதுவுடைமையர், பொதுவுடைமையாளர்
கரெக்ட்	10	சரியான
காமெராமேன், கேமிராமேன்	3	நிழற்படம் எடுப்பவர், ஒளிப்பதிவாளர்
காலண்டர்	9	நாட்காட்டி
காம்பவுண்டு	3	வளாகம், மதிலகம்
கார்	61	விசை வண்டி, பொறியூர்தி, உந்து வண்டி
கார்ட், கார்டு	12	அட்டை
காமெரா, காமிரா, கேமிரா	42	நிழற்படக்கருவி
காரெக்டர்ஸ், கேரக்டர்	8	கதை மாந்தர், நடத்தை
காலேஜ்	19	கல்லூரி
காபரே (டான்ஸ்)	3	மதுக்கடை (நடனம்)
காஸ், கியாஸ், கேஸ்	4	(சமையல் எரி) வாயு
காலனி	3	குடியிருப்பு, குடியமைப்பிடம்
கார்டன்	3	தோட்டம், பூங்கா
காசட், காஸெட், கேசட், கேஸட்	8	பதிவு நாடா
கார்ட்டூன்	3	கேலிப்படம், வரைப்படம், கருத்துப்படம்
கால்ஷிட்	7	பணியழைப்பு
காயில்	3	கம்பிச்சுருள்
கிளாசிகல், கிளாசிக்	4	தரமான, சிறந்த, உயர்தர, புகழ்பெற்ற, செவ்வியல்
கிளாஸ்	4	வகுப்பு, பிரிவு
கிட்னி	3	சிறுநீரகம்
கிரிக்கெட்	13	மரப்பந்தாட்டம்
கிராண்ட் மாஸ்டர்	4	விற்பன்னர்
கிளப்	26	குழுமனை, கூடுமனை
கிளார்க்	3	எழுத்தர்
கிளாமர்	3	வசியத்திறம், கவர்ச்சி, கவர் ஆளுமை, கவர் திறம்
கிஸ்	3	முத்தம்
குட்	3	நல்ல, நன்று
குரூப்	4	குழு, கூட்டம்

கூலிங் கிளாஸ்	6	கருப்புக் கண்ணாடி
கெமிக்கல்	7	வேதியியல் சார்ந்த
கேஸ்	6	வழக்கு
கேபிள்	4	தந்தி, பாதாள வடம், கம்பிவடம்
கோர்ட்	4	நீதிமன்றம், வழக்கு மன்றம்
கோட்	3	மேலங்கி
சப்ஜெக்ட்	7	பாடம், நுவல்-பொருள், நவில் பொருள்
சஸ்பென்ஸ்	5	ஆவல் நிலை, எதிர்பார்ப்பு நிலை
சர்டிபிகேட்	5	சான்றிதழ்
சான்ஸ்	11	வாய்ப்பு
சார், ஸார்	134	ஐயா
சினிஃபீல்டு, சினிமா இன்டஸ்ட்ரி	3	திரைத்துறை, திரைப்படத்தொழில்
சினிமா	110	திரைப்படம்
சீட், ஸீட்	19	இடம், இருக்கை
சீரியஸ்	8	ஆபத்தான, கருத்தூன்றிய, விளையாட்டுத்தன மற்ற கருத்தாழமுடைய
சீன்	4	காட்சி
சூப்பர் ஸ்டார்	3	சிறந்த நடிகர்,முதல்தர நடிகர், கவர்ச்சி நடிகர்
சூட்கேஸ்	7	சிறுபெட்டி, கைப்பெட்டி
சூபபிரண்ட், சூப்பிரண்டென டன்ட், சூப்ரின்டெண்டு	3	மேற்பார்வையாளர்
சூப்பர்	6	உயர்ந்த, சிறப்பான, சிறந்த, மேலான, மிகுந்த செலவில் உருவாக்கப்பட்ட
செக்ரட்டரி, செகரட்டரி	8	செயலாளர்
செகண்டு, செகண்ட்	5	வினாடி, நொடி, கணப்போது, கணம், இமைப்போது
செக்	12	காசோலை
செயின்	3	சங்கிலி, அணிக்கோவை
செலக்ட்	7	தெரிந்தெடு
செலக்ஷன்	4	தெரிந்தெடுத்தல்
செக்ஸ்	11	பாலினம் சிற்றின்பத்துறை
செட்	7	அமைப்பு

செகண்டரி	6	இரண்டாம் நிலையிலான
செஸ்	6	சதுரங்கம்
சைக்கிள் ஸ்டாண்ட்	3	மிதிவண்டி நிலையம்
சைக்கிள்	23	மிதிவண்டி
சைஸ்	5	அளவு, பருமன், மட்டு
சோபா	3	சாய்விருக்கை, அகல்தவிசு
ட்ரெயின்	3	தொடர்வண்டி, புகைவண்டி
ட்ரான்ஸ்ஃபர், ட்ரான்ஸ்பர்	3	இடமாற்றம்
ட்ரை, டிரை	4	முயன்று பார், முயற்சி செய், முயலு
ட்ரஸ்ட், ட்ரஸ்டு	4	நம்பிக்கை, அறநிலை, கூட்டு நிறுவனம், பொறுப்பாண்மை
டக்கர்	8	சிறப்பான
டப்பிங்	3	வேற்றுமொழிப்பதிவு
டக்	3	சுழி நிலை
டஜன்	3	பன்னிரண்டு
டயம், டைம்	6	நேரம், காலம்
டவுன்	5	நகரம், பட்டினம்
ட்ரீட்	3	நடத்து, இன்ப விருந்து, விருந்துபச்சாரம்
ட்ரஸ். டிரெஸ், டிரஸ்	10	உடை
டாக்டர்	93	மருத்துவர்
டாடி	3	தந்தை
டான்ஸ்	33	நாட்டியம், நடனம்
டாப்	8	மிகச்சிறப்பான, முதன்மை நிலை
டாய்லெட்	3	கழிப்பறை
டிக்கட், டிக்கெட்	8	(அனுமதிச்) சீட்டு, பயணச் சீட்டு
டி. இ. ஓ.	8	மாவட்ட கல்வி அதிகாரி
டி.வி., டெலிவிஷன், டி.வி	47	தொலைக்காட்சி
டிபன்	5	சிற்றுண்டி
டிஸ்மிஸ்	12	நீக்கு, வெளியேற்று
டியர்	6	அன்புள்ள
டிராமா	5	நாடகம்
டிராயர்	3	காற்சட்டை
டிப்ஸ்	4	இனாம், கையூட்டு, சிறு அன்பளிப்பு

டிரைவர்	14	ஓட்டுநர்
டியூட்டி	3	கடமை, வேலை
டிராப்ட், ட்ராப்ட்	4	வரையோலை
டிஸைன், டிசைன்	3	வரையுரு, தினுசு, உருமாதிரி
டிராலி	7	தள்ளு வண்டி
டீச்சர்	30	ஆசிரியர், ஆசிரியை
டீ	10	தேநீர்
டூப்	4	மாதிரி ஒத்த உருவமுடையவர், மாற்று நடிகர், போலிமை மாதிரி
டூயட்	4	உறழ்பாடல், மாற்றுப்பாட்டு
டென்த்	3	பத்தாவது
டெக்னிக், டெக்னிகல்	4	உத்தி, பாணி, நுணுக்கம், நுணுக்கம் சார்ந்த, தொழில் நுட்பம் சார்ந்த
டெலிபோன், போன், ஃபோன்	49	தொலைபேசி
டென்ஷன்	4	மனஇறுக்கம், கெடுபிடிநிலை
டேஸ்ட்	4	சுவையுணர்வு, விருப்ப நாட்டம், நாவுணர்வு
டேப், டேப்ரிக்கார்டர்	6	நாடா, (ஒலிப்பதிவு) நாடாக்கருவி
டேலண்ட், டேலண்ட்ஸ்	4	புத்தி நுட்பம், திறமை, செயல்திறம், திறலாண்மை
டைட்டில்	6	தலைப்பு
டைரக்ட்	13	இயக்கு
டைரக்டர்	70	இயக்குநர்
டைரி	17	நாட்குறிப்பேடு
டைப், டைப்ரைட்டிங்	12	வகை, தட்டெழுத்து
டைப்பிஸ்ட்	3	தட்டச்சர்
டைரக்ஷன்	13	திசை, இயக்கம்
த்ரில், திரில்லிங்	5	சிலிர்ப்பு, உணர்வார்வம், மயிர்க்கூச்செறிநிலை
த்ரிநாட் செவன்	3	மூன்று சுழி ஏழு (307)
தாங்க் யூ	5	உங்களுக்கு நன்றி
தாங்க்ஸ், தேங்க்ஸ்	12	நன்றி
தியேட்டர்	26	அரங்கம்
நம்பர்	4	எண்
நர்ஸ்	9	செவிலி
நயன்த்ரீல்	3	ஒன்பதாவது படச்சுருள்

நியூஸ்	7	செய்தி
நைட்	4	இரவு
நைஸ்	3	நேர்த்தி, இனியது, இனிதான
நோ	4	இல்லை, கிடையாது, வேண்டாம்
ப்ருட், ப்ருப்ரீடர், புருப்ரீடர்	4	அச்சுப்படி, அச்சுப்பிழைத் திருத்துவோர்
ப்ராப்ளம்	4	பிரச்சனை
ப்ளீஸ்	22	தயவுசெய்து, தயைசெய்
ப்ளஸ் பாயிண்ட், பிளஸ் பாயிண்ட்	5	கூடுதலான சிறப்புக் குறிப்பு, மிகைநலக்கூறு
பட்ஜெட்	17	நிதிநிலை அறிக்கை
பலூன்	5	ஊதற்பை, காற்றுக்கண்டு
பர்டிகுலர்ஸ்	3	விவரம், விவரக்கணக்கு, நுணுக்கத்தகவல்
பனியன்	3	உள்ளாடை (ஆண்)
பப்ளிகேஷன்ஸ், பப்ளிகேஷன்	12	வெளியீடு
பர்த், பர்த்டே	3	பிறப்பு, பிறந்தநாள், நாள் மங்கலம்
பஸ்	3	பேருந்து
ப்யூரிட்டன், ப்யூரிடன்	38	கடுந்தூய்மையாளர், கடுந்தூயர், கண்டிப்பாளர்
பப்ளிஷ்	3	வெளியீடு
பர்ஸ்	3	பணப்பை
பாடி	3	உடல்
பாக்கெட்	5	சட்டைப்பை
பாங்க், பேங்க்	5	வங்கி
பாட்டில்	26	புட்டி, குப்பி
பாண்ட், பேண்ட், பான்ட்	10	முழுக் காற்சட்டை
பாத்ரூம்	12	குளியல் அறை
பார்ட்டி	5	விருந்து, கட்சி, தரப்பினர், குழுவினர்
பாஸ்	10	வெற்றி, தேர்ச்சி
பாஸ்போர்ட்	5	அடையாளச் சீட்டு, அனுமதிச்சீட்டு, கடவுச்சீட்டு
பிக்னிக்	3	உண்டாட்டு, மனைப்புற உண்டாட்டு

பிரின்ஸிபால்	3	(கல்லூரி) முதல்வர்
பிரேயர்	3	வழிபாடு
பிரேக்	2	இடைமறி, தடங்கல்செய், உடை, இடைநிறுத்தம்
பிட்	3	சிறுதாள், துண்டு
பிசினஸ், பிசினஸ், பிசினெஸ்	12	வாணிகம்
பிளான்	5	திட்டம், ஏற்பாடு
பிலிம்	6	படச்சுருள்
புக்	3	புத்தகம், ஏடு, சுவடி, பதிவுசெய்
புரோக்ராம், ப்ரோகிராம்	12	நிகழ்ச்சிநிரல், செயல்முறைத் திட்டம்
புரபஸர், புரபஸர் ப்ளஸ்	3	பேராசிரியர், பெரும்புலவர்
பூட்ஸ்	3	காலணி
பெட்	3	படுக்கை, பந்தயம்
பெட்டர்	3	சிறந்த, மேம்பட்ட
பெட்ரோல்	16	கல்லெண்ணெய், தெளிந்த நில எண்ணெய்
பெயிண்டிங், பெயிண்டிங்ஸ்	6	வண்ணம் தீட்டு வண்ணப்படம்
பேனர்	3	துகிற்கொடி, விளம்பரப் பட்டிகை
பேனா	8	எழுதுகோல், மைக்கோல்
பேப்பர்	15	தாள், செய்திஇதழ், ஆய்வுக் கட்டுரை
பேபி	7	குழந்தை, குழவி
பைலட்	3	விமானி
போர்ட்டர்	3	சுமையாள், சுமை தூக்கி, கூலியாள்
போட்டோ, போட்டோகிராஃபர்	32	நிழற்படம். நிழற்படக் கலைஞர்
போலீஸ்	38	காவல்துறை
போட்டோகிராபி	5	நிழற்படக்கலை
போனஸ்	4	மிகை ஊதியம், கொடை ஊதியம், பங்குத்தொகை
போஸ்டர்	3	சுவரொட்டி
போஸ்	4	தோரணை, நிற்கும் நிலை
பிலிம்ஸ்	1	புகைப்படச்சுருள்
மம்மி	11	தாய்

மட்டன்	4	ஆட்டிறைச்சி
மாடலிங்,	5	உருப்படிவமாய்த் தோன்றுதல், (முன்னோடி உரு) மாதிரி
மானேஜர், மேனேஜர்	11	மேலாளர்
மார்க்	11	மதிப்பெண், குறியீடு
மிஸஸ்	6	திருமதி
மிஸ்	8	செல்வி, குமாரி
மிஸ்டர்	15	திரு
மிமிக்ரி	5	ஒப்புப் போலியான நடிப்பு, ஒப்புப்போலி
மியூசிக்	23	இசை
மீட்டிங்	3	கூட்டம், சந்திப்பு
முஸ்லிம்	3	முகமதியர், இசுலாமியர்
மூவ்மெண்ட்	4	இயக்கம்
மூட் அவுட்	3	உற்சாகமிழந்த நிலை
மெடிக்கல்	4	மருத்துவ
மெட்ராஸ்	13	சென்னை
(மெடிக்கல்) காலேஜ்	3	(மருத்துவக்) கல்லூரி
மெஷின்	4	இயந்திரம்
மேக்கப்	15	ஒப்பனை
மேக்ஸ், மேத்ஸ், மாத்ஸ்	5	கணிதம்
மேட்டர்	9	செய்தி
யூனிவர்ஸிடி	3	பல்கலைக்கழகம்
யூஸ்	5	உபயோகம், பயன்
ரயில்	5	புகைவண்டி, தண்டவாளம், இருப்புப்பாதை
ராக்கெட்	3	ஏவுகணை
ராங்க்	6	தர வரிசை, படிநிலை
ராஸ்கல்	3	போக்கிரி, கயவன்
ரிப்போர்ட்	9	அறிக்கை, தெரிவி
ரிஜிஸ்ட்ரார், ரிஜிஸ்டர்	5	பதிவாளர், பதிவேடு
ரியலிஸம்	3	மெய்மை, உண்மைநிலை, நடப்பியல், இயல்பு நவிற்சி
ரிலீஸ்	14	வெளியீடு
ரிக்கார்டிங், ரெகார்டிங்	16	பதிவு, ஒலிப்பதிவு
ரிசர்வ், ரிசர்வேஷன்	4	இடம் ஒதுக்கு முன்பதிவு
ரிடையர்	8	(பணி) ஓய்வு பெறு, விலகுதல்

ரீடர்ன்	3	திரும்பி வா (அ) போ, விவரம் கொடு, திருப்பிக் கொடு.
ரிவர்ஸ்	3	எதிரிடை, மறிதலை, பின்புறம்
ரீல்	4	படச்சுருள்
ரூம்	9	அறை
ரெடி	8	அணிய நிலை
ரெஸ்ராரெண்ட், ரெஸ்டாரன்ட்	3	உணவகம்
ரேட்	3	விலை, மதிப்பு
ரேடியோ	5	வானொலி
ரோபாட்	3	இயந்திர மனிதன்
ரோடு	21	சாலை
லவ், லவ்ஸ்டோரி	10	அன்பு. காதல், காதல்கதை
லஞ்ச்	3	மதிய உணவு, சிற்றுண்டி
லாரி	13	சரக்குந்து, திறந்த வண்டி
லாண்டரி	6	சலவை நிலையம்
லிப்ட்	3	தூக்கு, உயர்த்து, தூக்கி
லவ், லீவு	7	விடுமுறை
லெட்டர்	10	கடிதம், மடல், முடங்கல்
லே அவுட்	3	திட்ட அமைப்பு
லேட்டஸ்ட்	6	இப்போதைய, அண்மையி லான, இன்றைய
லேடிஸ்	5	பெண்கள், மகளிர்
லேட்	23	தாமதம், காலம் கடந்த நிலை, அண்மையில்
லேஸ்	4	நாடா, சரிகை, ஒப்பனைப் பின்னல்
லைஃப்	5	வாழ்க்கை
லைட்ஸ் ஆன்	13	வெளிச்சம் காட்டு, விளக் கேற்றல், ஒளிவட்டம்
லைசென்ஸ்	6	அனுமதி, உரிமம்
லோன்	5	கடன்
வாய்ஸ்	6	குரல்
வாட்ச்	8	கடிகாரம், மணிப்பொறி, உற்றுநோக்கு, உன்னிப் பாய்க் கவனி
வார்டன்	56	காப்பாளர், பாதுகாவலர், (சிறைச்சாலை, மாணவர் விடுதி) மேலாளர்
வாட்ச்மேன்	3	காவற்காரன், காவலாளி

வீடியோ	25	ஒளி (நாடா), ஒளிப்(பெட்டி)
வெரிகுட்	5	மிகவும் நல்லது, மிக்க நன்று
வேன்	8	சரக்கு வண்டி, கூண்டு வண்டி சரக்கு ஊர்தி, கூண்டு ஊர்தி
வேஸ்ட்	5	கழிவு, தேவையில்லாத
ஜட்ஜ்	3	நடுவர்
ஜர்னலிஸம்	5	இதழியல்
ஜாக்பாட்	3	அதிட்ட பந்தயம், எதிர்பாரா இலாபப்பந்தயம்
ஜீன்ஸ்	3	முரட்டு முறுக்கிழைத் துணி, முறுக்கிழைக் காற்சட்டை
ஜெயில்	11	சிறைச்சாலை
ஜோக்	11	சிரிப்புச்செய்தி, வேடிக்கைப் பேச்சு விகடம், கேலித் துணுக்கு
ஷர்ட்	3	மேற்சட்டை
ஷாக்	3	அதிர்ச்சி
ஷாட்	7	(திரைப்பட) வீச்சு
ஷூட்டிங்	33	படப்பிடிப்பு
ஷோ	3	காட்சி
ஷூட்	3	குறிபார்த்துச் சுடு, படமெடு
ஸ்ட்ரைக்	8	வேலை நிறுத்தம்
ஸ்டில்ஸ, ஸ்டில்	4	அசைவிலா (நிழற்படம்)
ஸ்டுடியோ	29	படப்பிடிப்பு நிலையம்
ஸ்டார்	5	நட்சத்திரம், நட்சத்திர நிலை, நடிகர்
ஸ்வீட்	4	இனிப்பு
ஸ்கூட்டர்	18	இரு சக்கரப் பாய் ஊர்தி, இரண்டு சக்கர மோட்டார் வண்டி, பாயும் (மோட்டார்) வண்டி
ஸ்கூல்	11	பள்ளிக்கூடம்
ஸ்டாட்	4	நிறுத்து, நிறுத்தம்
ஸ்பெஷல்	4	சிறப்பான

ஸ்டேஜ்	19	மேடை, நிலை
ஸ்பீட்	3	வேகம்
ஸ்டாண்ட், ஸ்டாண்டு	4	நிற்கும்நிலை, ஆதாரம், தாங்கி
ஸாரி	6	வருந்துகிற, இரங்குகிற
ஹெட்மாஸ்டர்	3	தலைமையாசிரியர்
ஹேண்ட் பேக்	4	கைப்பை
ஹைஸ்கூல்	3	உயர்நிலைப்பள்ளி
70 எம். எம்.	1	70 மி. மி.
ஹலோ	10	இது ஒரு விளிச்சொல் (எ. டு) " உங்களைத்தானே ", " ஏய், என்ன " " வணக்கம் "
ஹால்	3	கூடம், பெரிய அறை
ஹாபி	3	பொழுதுபோக்கு
ஹீரோயின், ஹீரோயின்ஸ்	9	கதாநாயகி, கதாநாயகியர், தலைவி, தலைவியர்
ஹீரோ	22	கதாநாயகன், கதைத் தலைவன்
ஹெல்ப்	3	உதவி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை தமிழ்த் துரோகியா ?

பு. ஜார்ஜ்,
ஆய்வாளர்,
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-5

இந்திய தேசத்தவர்களெல்லோரும் ஒரே சாதி என்ற இலட்சியத்தைக் கைக்கொள்ள வேண்டும். இந்த நாளில், இந்த வகுப்புவாதமும் மொழி வாதமும் ஏற்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

இக்கிளர்ச்சியானது மொழிவாதத்தோடு அமைந்து விடவில்லை. தூய தமிழ்வாதத்தில் நம்மைச்செலுத்தி விட்டது' பேசும்போதும் எழுதும்போதும் வட மொழிப் பதங்களை நீக்கித் தக்க தமிழ்ச் சொற் களைப் பொறுக்கியெடுத்து வழங்க வேண்டுமாம். இதனால் இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இவ்வொரு வனும் சொல்லாராய்ச்சியாளனாக (Philologist) இருக்க வேண்டுமென்று இவ்வாதம் கூறுகிறது. இது நடைமுறையில் வரக்கூடிய காரியமல்ல. வட மொழிச் சொற்களை மிகுதியாக எடுத்தாளுவதைக் கண்டிப்பதற்கு இவ்வாதம் ஒரு நெறியாகலாம். ஆனால், அறிவு வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் பெருந்தீங்கு இழைப்பதாய் முடியும்.

ஆங்கில மக்கள் தாங்கள் எழுதும் போது லத்தீன், கிரீக் முதலிய மொழிகளிலிருந்து வந்துள்ள சொற் களை விலக்குகிறார்களா ? சொற் போரட்டம் அவர்களுடைய நோக்கமல்ல ; அறிவு வளர்ச்சியே முக்கிய நோக்கமாயுள்ளது. நாமும் அந் நோக்கத்தைக் கைக்கொள்ள வேண்டுவது இன்றி யமையாததல்லவா ? மேலும், நமது வழக்கிற் புகுந்துவிட்ட சொற்களெல்லாம் தமிழ்மொழிச் சொற்களே. ஒரு கடலில் எத்தனையோ ஆறுகளி

> விருந்து நீர் வந்து பெருகலாம். ஏதாவது ஓர் ஆற்றிலிருந்து வந்து கலந்த நீரை ஒதுக்கிவிட முடியுமா? மற்றைய நீர்கள் மட்டுந்தான் 'கடல்' ஆகும் என்று சொல்லுவது பொருத்தமாகுமா? தமிழ்மொழியும் ஒரு கடல் போன்றது என்பதை நாம் மறக்கலாகாது (தமிழின் மறுமலர்ச்சி, நூற் களஞ்சியம்; தொகுதி-2, பப. 16, 17)

இப்படியாக, ஆரிய திராவிட வாதத்தினரும் தூய தமிழ் வாதத்தினரும் விமரிசிக்கப்படும்போது, இதில் தேவநேயப் பாவாணரும் விமரிசிக்கப் பட்டுள்ளார் என்பது தெளிவாகிறது. தடைகளை உடைத்து எழுச்சி கொள்ள நினைத்தவர்கள் வையாபுரிப் பிள்ளையால் விமரிசிக்கப்படும் போது அதைப் பொறுத்துப் கொள்ளவோ சீர்தூக்கிப் பார்க்கவோ அவர்களால் முடியாது என்பது வெளிப்படை. எனவேதான் தேவநேயப் பாவாணர் வையாபுரிப்பிள்ளையையும் பிற அந்தணர்களையும் அந்தணச் சார்புடையோரையும் திட்டுகிறார் என்பது தெரி யவருகிறது. ஆரிய திராவிடம் பற்றி நடுவு நிலைமையில் பேசிய வையாபுரிப்பிள்ளை 'தமிழ்த்துரோகி' என்றும், 'பொய்யாபுரி' என்றும் அடிகளை வாங்கிக் கொண்டார். அந்த இரு தரத்தாரும் போர் ஓய்ந்த பின்னே அவரை எண்ணிப்பார்க்க வேண்டிய அவசியம் இன்று இருக்கவே செய்கிறது.

தமிழ்ப் பேரகராதியில் குறைகள் நேர்ந்த முறையை வையாபுரிப்பிள்ளை ஓர் எடுத்துக்காட்டு மூலம் விளக்குவதை இனிக் காணலாம்.

> தமிழ் நூல்களிற் பெரும்பாலன பிரதிகளை நன்கு பரிசோதித்து வெளியிடப் பெற்றன அல்ல. ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் சாமிநாதய்யர் முதலிய ஒருசிலரது பதிப்புக்களே கொள்ளத்தக்கவையாயிருந்தன. ஐயருங்கூட ஒரு சில இடங்களைத் தவறாக உணர்ந்து புதுச்சொற் களைச் சிருஷ்டித்து விட்டனர். உதாரணமாகச் சிலப்பதிகாரத்தில் வாழ்த்துக் காதையில் (26) 'பாவைமா ராரிக்கும் பாடலே பாடல்' என்று தவறாக வாசித்துக்கொண்டு ஆரிக்கும் என்பதற்கு

> 'ஒலிக்கும்' என்று பொருளெழுதிவிட்டனர். இவர்கள் எழுதியதனை நம்பி, லெக்ஸிகனும் 'ஆரித்தல்' என்று ஒரு சொல்லைக் கொடுத்து 'ஒலித்தல்' என்று பொருள் கொடுத்து விட்டது. எனவே 'ஆரித்தல்' என லெக்ஸிகனில் காணும் பதம் தவறானதாகும். இவ்வகைப் போலிச் சொற்களை 'கோஸ்ட்வேர்ட் (Ghost word) என்று ஆங்கிலத்தில் கூறுவர். உண்மையான பாடம் ஆரிரக்கும் என்பது. இதன் பொருள் (சோழர்க்குரிய) ஆத்தி (மாலை) யை இரக்கும் என்பதாகும். ஐயர் பதிப்பிற்கூட இவ்வகைப் பிழை காணப்படுமாயின், பிறாது பதிப்புக்களைப் பற்றி யாது சொல்லக் கிடக்கிறது
>
> (தமிழின் மறுமலர்ச்சி—நூற்களஞ்சியம், தொகுதி 2, ப. 434)

> இவ்வாறு பிறர் பதிப்புகளை நம்பியதால் நேர்ந்த பிழைகள் ஒரு புறமிக்க 'லெக்ஸிகன்' அலுவலகத்திலேயே எழுத்துக்கள் செவ்வையாய் அமையப் பெறாமையால் நேர்ந்த பிழைகளும் உண்டு
>
> (மேலது, ப. 438)

எனக் கூறி, 'சுள்ளாணி' என்ற சொல் தேவையற்ற நிலையில் ஒரே பொருளில் இருமுறை இடம் பெற்றுள்ளது எனவும், 'ஊசிவேர்' என்றிருக்க வேண்டிய சொல் 'உச்சிவேர்' எனவும் லெக்ஸிகனில் தவறாக இடம் பெற்றுள்ளமையையும் வையாபுரிப்பிள்ளை எடுத்துக் காட்டுகிறார். இப்படிப்பட்ட பிழைகள் தமிழ்ப் பேரகராதியில் இன்னும் திருத்தம் பெறாமல் இருப்பது வருந்தத்தக்கதே.

திரு. தொ. மு. சி. ரகுநாதன், தமது கட்டுரையில் கூறிய கருத்தைப் பார்ப்போம்.

> வையாபுரிப்பிள்ளையின் ஆராய்ச்சியில் சொல்லாராய்ச்சியும் இலக்கணப் பிரயோகம் பற்றிய ஆராய்ச்சியும் இடம் பெற்றிருந்த அளவுக்கு வரலாற்றியல் ரீதியான ஆராய்ச்சி அதிகம் இடம் பெறவில்லை. அதிலும் அவரே மேலே குறிப்பிட்ட சமூகவியல் வரலாற்றியல் ரீதியான ஆராய்ச்சி இடம் பெறவேயில்லை எனலாம்

என்கிறார்,

வையாபுரிப் பிள்ளையின் சிறப்பம்சமே அவரது தர்க்க பூர்வமான ஆராய்ச்சி தான். அவரது பெரும்பாலான கட்டுரை களில் இப்பார்வை ஊடுருவி நிற்பதைக் காண முடிகிறது.

> அவருடைய தட்டுத்தளர்வற்ற ஆய்வு முறையை அவர் வரலாற்றுப் பொருள்முதல்வாத உணர்வுடன் பிரயோகித்திருப்பின் அதிகப் பயன்பெற்றிருக்கலாம் (தமிழில் இலக்கியவரலாறு, ப. 130)

எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறுவதுபோல் வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கண்ணோட்டம் இவரிடம் இல்லை என்பது தெரியவருகிறது. ஆனால் இவ்வகைக் கண்ணோட்டத்தில் அமைந்த மேலை நாட்டு இலக்கியங்கள் பலவற்றைப் பயின்றதன் பயனாக, தம்மையறியாமலேயே தர்க்கவியல் போக்கில் கருத்துகளை அவர் கையாண்டுள்ளார் என்பது தெளிவு. இது தொடர்பாகப் பேராசிரியர் கி. அரங்கன்,

> ஏன் வையாபுரிப்பிள்ளை பொருள்முதல் வாதக் கண்ணோட்டத்தை மேற்கொள்ளவில்லை?

என்று எழுப்பிய கேள்விக்குத் தொ. மு. சி. பதிலளிக்கையில்

> அவர் காலத்தில் அவ்வகைக் கருத்துநிலை இங்கு வளரவில்லை

எனக் குறிப்பிட்டார். ஆனால், சிங்காரவேலர், ஈ. வே. ரா. முதலாகப் பலரும் அவர் காலத்தில் தான் வாழ்ந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அக் காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் பலர் சமூகப் பிரச்சினைகளில் நேரடியாகப் பங்கு கொள்ளாமல் தங்கள் ஆராய்ச்சியே வாழ்வு என வாழ்ந்த போக்கைக் காணமுடிகிறது உதாரணமாக உ. வே. சா., மு. ராகவய்யங்கார், ரா. ராகவய்யங்கார் முதலியோரைக் குறிப்பிடமுடியும். இதில் வையாபுரிப் பிள்ளையை யும் அடக்கிவிட முடியும்.

இறுதியாக, வையாபுரிப்பிள்ளையின் 'இந்திவாதம்' தொடர்பான கருத்துகளைக் காண்போம்.

ஆங்கிலமோ இந்தியோ தமிழகத்தில் தலைமை ஏற்பதைக் கண்டிக்கும் வையாபுரிப்பிள்ளை அவற்றின் அவசியத்தை

உணராமல் இல்லை. எனவே தான் இந்தியைக் கற்பதனால் நமது மொழிக்கு விளையும் நன்மையை விளக்கச் சொல்கிறார்.

> உண்மையிலே கெடுதி விளைக்குமானால் இவ்வாதத்தைத் தமிழ்மொழி எதிர்த்து நிற்க வேண்டியது அவசியம்.

எனக் கூறும் வையாபுரிப்பிள்ளை

> தமிழுக்கு இதனால் ஒரு சிறிதும் கேடு விளையுமென்று தோன்றவில்லை
>
> (தமிழின் மறுமலர்ச்சி, நூற்களஞ்சியம், தொகுதி 2, ப. 12)

எனத் தமது நிலைப்பாட்டையும் விளக்கிவிடுகிறார். இது தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில்,

> இந்தி மொழியால் தமிழுக்குத் தீங்கு நேரத்தான் செய்கிறது. எனவே அதை எதிர்த்தாக வேண்டும்

எனப் பேராசிரியர் பொன். கோதண்டராமன் கூறியது, வையாபுரிப்பிள்ளையின் நிலைப்பாட்டிலிருந்து மாறுபடுகிறது. இந்தித் திணிப்பை மனதில் கொண்டு பொற்கோ அவ்வாறு சொல்லியிருத்தல் வேண்டும். தாய்மொழியில் கல்வி கற்க வேண்டும் எனும் வையாபுரிப் பிள்ளையின் கருத்தை எடுத்துரைக்கையில்,

> கல்விமுறை தாய்மொழில் வரும்பொது மொழிதானே வளரும். இதை உணராமல் எவனாவது தமிழை வளர்க்கிறேன் என்று சொன்னால் அவன் ஏமாற்றுக் காரணாயிருப்பான்

என்று அவர் கூறியதும் எண்ணத்தக்கதாயுள்ளது.

மறுப்புக்குட்படாத அறிஞன் இல்லை என்பது வெளிப்படை. இப்படியிருக்க வையரபுரிப் பிள்ளையை மட்டும் மறுப்புக்குட் படுத்தி 'வைதல்' என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. வையாபுரிப் பிள்ளையை எதிர்க்க வேண்டிப் பலர் தமிழாராய்ச்சி யில் ஆழமாக ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படிப் பலரை ஆராய்ச்சி

யில் ஈடுபடச் செய்தவர் வையாபுரிப்பிள்ளை என்ற தன்மைக்காவது அவரை நாம் நினைவு கூர்தல் அவசியம்.

> ஆராய்ச்சியுலகில் இருந்த மூடநம்பிக்கைகளைக் கண்டித்த வையாபுரிப்பிள்ளையைத் தமிழுக்கு விரோதமானவர்கள் கூட தவறாகப் பயன் படுத்தியமை கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று.

எனப் பேராசிரியர் பொற்கோ குறிப்பிட்டது போல, வையாபுரிப் பிள்ளையின் உழைப்பையும் பயனையும் அறிந்தோ அறியாமலோ பெற்றுக் கொண்டிருக்கும் தமிழர் சிலர் அவரைத் 'தமிழ்த் துரோகி' என இன்னும் கூறிக்கொண்டிருப்பது அல்லது நினைத்துக் கொண்டிருப்பது அறியாமையின் விளைவேயாகும். இப்படிக் குறுகிய மனப்பான்மையில் பார்த்தால் தமிழகத்து எந்த அறிஞனையும் தமிழ்த்துரோகியாக்கி விடமுடியும்.

குறிப்பு: இக்கட்டுரை தொடர்பாக விவாதித்து உதவிய எனது ஆய்வு மேற்பார்வையாளர் வீ. அரசு அவர்களுக்கு நன்றி.

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	100	00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4	00
நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	75

பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

எழுத்ததிகாரம்	ரூ.	40	00
சொல்லதிகாரம்	ரூ.	45	00
கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]	ரூ.	7	50
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4	50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TJ/24

நூல்-அஞ்சல்



பெறுநர்

திருமிகு நூலகர் அவர்கள்

அரசினர் கீழ்த்திசைச்சுவடி

நூலகம்

சென்னை

600 005

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுவோர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமோகன்,
ஜெமினி அச்சகம், 1337 / 1, மேலராஜ வீதி,
தஞ்சாவூர் - 613 009.